திராவிடர் வாரத்தாள் | 16 பக்கங்கள் | விலை அணா 0—1—6

# போர்வாள்

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்
[illegible]ளஞ்செழியன், B A. (Hons)

| | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 5 0 0 | ஆண்டு சந்தா | ரூ. 6 8 0 |
| 6-மாதம் | 2 8 0 | 6-மாதம் | 3 4 0 |

[illegible]ாள் 3 || சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆவணி 18 — 3—9—49 சனிக்கிழமை || வீச்சு 3

## சாகவில்லை! தூங்குகிறது!!




"சென்ற இரண்டு ஆண்டுகளாக, காங்கிரஸ் சரியான முறையில் பணியாற்ற[illegible]ல்லை என்பது மெய்தான். ஆனால் இதற்குப் பொருள் காங்கிரஸ் செத்துப்போய்[illegible]ட்டது என்பதல்ல; அது களைத்துச் சோர்ந்து அயர்ந்துகிடக்கிறது என்பது[illegible]ன்."

—பண்டித நேருவின் சொற்பொழிவு.

# சங்கராச்சாரியின் சலசலப்பு!

C.N.A.

**அந்தவால்!**
**வசீகரப்பார்வை!**
**வளைந்துள்ள உடல்!**
**குதித்தோடும் குணம்!**
**கோபுரத்தின்மீதும் தாவும்-**
**ஆற்றல்!**

குரங்காரே! கூறுவேன் கேண்மின்! உமது அழகுக்கு ஈடு இந்தக் குவலயத்திலே இல்லை! ஊர் அமைத்தோம், பேர் அமைத்தோம், என்று மானிடர் பிதற்றுவர், பெருமைக்குரிய காரியங்களென்று கருதி! இருக்கட்டும், அவர்கள், இக்காரியங்களிலே பெருமைகூடப் பெறட்டும், பெற்றால்மட்டும் என்ன? உம்மை அவர்கள் நிகர்த்தவராவரோ? குதித்து ஆடத்தெரியுமா? கோபுரம் ஏறமுடியுமா? தலையிலே பாகை கட்டி, வால் அமைப்பர். ஆனால் உமக்கு இறைவன் அருளிய வாலுக்கு அது ஈடாகுமா? உமது பார்வை உண்டா அந்த மாந்தருக்கு! வானரரே! உமக்கு அவர் ஈடாகார்!

**பாரதியார்**, குரங்காரின் உயர்வைக் குயிலி பாடியதாகக் கூறியிருக்கிறார், ''**குயில்**'' என்ற இனிய உயரிய பாடலிலே! தத்துவம் கூற அவர் இதனைச் செப்பினார், என்ற போதிலும், குரங்கின் இலட்சணத்தைப் புகழவேண்டும் என்று, ஒரு குறும்புக்காரன் எண்ணினால், பாரதியாரின் குயிலிடம் பாடம் கேட்கவேண்டும், அவ்வளவு அழகாக அந்தக்குயில், குரங்கின் வடிவழகையும் குண விசேஷத்தையும் கூறுகிறது. பாருங்கள் கவிதையை:

மேனியழகினும் விண்டுரைக்கும்
வார்த்தையிலும்
கூனியிருக்கும் கொலு நேர்த்தி
தன்னிலுமே
வானரர் தன் சாதிக்கு மாந்தர்
நிகராவாரோ?
ஆனவரையும் அவர் முயன்று
பார்த்தாலும்
பட்டுமயிர்மூடப்படாததமதுடலை
எட்டுடையால் மூடியெதிருமக்கு
வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தை
செய்துவானரர் தம்
ஆசை முகத்தினைப் போலாக்க
முயன்றிடினும்
ஆடிக்குதிக்கும் அழகினுமை
நேர்வதற்கே
கூடிக்குடித்துக் குதித்தாலும்
கோபுரத்தில்
ஏறத்தெரியாமல் ஏணிவைத்துச்
சென்றாலும்
வேறெத்தைச் செய்தாலும் வேக
முறப்பாய்வதிலே
வானரர் போலாவாரோ?
வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங்கச்சை யிதற்குநிக
ராமோ?
பாகையிலே வாலிருக்கப்பார்த்த
துண்டு கந்தைபோல்
வேகமுறத்தாவுகையில் வீசி
யெழுவதற்கே
தெய்வங்கொடுத்த திருவாலைப்
போலாமோ?
சைவ சுத்த போசனமும்,
சாதுரியப்பார்வைகளும்
வானரர்போற் சாதியொன்று
மண்ணுலகின் மீதுளதோ?

* * *

பாடலிலே, வெறும் நகைச்சுவைமட்டுமில்லை, வேதாந்தமும் உண்டு, என்று கூறுவோர் உளர், இருக்கலாம், இருக்கட்டும். ஆனால் எனக்கு, இதிலுள்ள நகைச் சுவையை விட இது, கிளப்பும், வேறோர் கருத்து அதிகச் சுவைபயப்பதாக இருக்கிறது. என்ன என்று கேட்பீர்? கேட்பானேன்! நானே கூறிவிடுகிறேன். குரங்கு, இக்கவிதையைக் கேட்டிடும் சக்திபெற்றுக் கேட்டபிறகு, மானிடரிடம் மல்லுக்கு நின்று, ''ஓய்! மானிடரே! என்ன அற்புதங்களை நீவிர் செய்தாலும் சரி! எமக்கு நீவிர் ஈடாகமாட்டீர். இதோ பாரும், எமது வாலை! இதற்கு ஈடாக, ஏது உம்மிடம்!'' என்று அறை கூவினால், பரிதாபத்துக்குரிய மானிடர்என்ன பதில் கூற முடியும்!

குரங்கினம், கவியின் சொல் கேட்டு நம்மிடம் வம்புக்குவராது, ஆனால், கவிகள், கதைகூறிகள், ஆகியோரின் மொழி கேட்டுக் கொண்டு, வானர இனமல்ல, சாதாரண நாருமல்ல, பூதேவர் கூட்டமிருக்கிறதே, அந்தகும்பல் வந்துவிடுகிறது போருக்கு! வானரத்தின் வடிவழகுபற்றிப் பாரதியார் பாடியதுபோல, இந்த வேதியக் கூட்டம், தமக்குள்ள இலட்சணங்களை, அந்த அழகான குடுமி! அலங்கார நூல்! அவசரமாக நடந்தால் தடுக்கும் ஆடைக்கட்டு! அரைத்த பூச்சுகளை அகலநீளமாக அப்பிக்கொண்டிருக்கும் அழகு! குளத்துத் தவளைபோல் கூவி ஆண்டவனைக் கூப்பிடும் நேர்த்தி! இடதுகையைத் தூக்கிக் காட்டி ஆசிகூறும் போக்கு! மனிதனைக் கண்டதும், எட்ட நில் என்று கட்டளையிடும் காட்டரசக்காட்சி!— எனும் இன்னோரன்ன இலட்சணங்களை, இன்றும், நாகரிகம் வளர்ந்தோங்கிய இந்நாளிலும், சிறப்பின் சின்னங்களென்றும், சீலத்துக்குச் சான்றுகளென்றும், குலப்பெருமைக்குரியகுறிகளென்றும், கூறிக்கொள்ளவும், இவைகளினாலேயே தமக்குப் ''பிரமதேஜஸ்'' இருப்பதாக உபதேசம் புரியவும் அவர்களில் பலருக்குத் துணிவு இருக்கிறது. அவர்களின் ''குருமார்களும்' குரங்கின் குண விசேஷத்தைக் குயில் பாடியபடி, அல்ல—குயில் கேலிமொழி கூறிற்று, மதிகெட்ட குரங்குக்கு அது புரியவில்லை, எனவே பூரித்தது—குருமார்கள், உண்மையாகவே, ஆரிய வேடத்திலேயும் நடவடிக்கைகளிலேயும், மேன்மையும் மகிமையும், இருப்பதாக நம்பிக்கொண்டு, பிறரையும் நம்பவைக்கிறார்கள்.

''பாம்பீச்'' சூட் அணிந்து கொண்டு, பாட்டா கம்பெனி ஷூவுடன் 'பம்பாய் கி பேடி' படத்தைப்பார்க்க, பார்க்கர்துரையுடன், பானம் அருந்திவிட்டுப் போகும், பஞ்சாபகேச சாஸ்திரியாருக்குப் பஞ்சகச்சம், உச்சிக் குடுமி, சந்தியாவந்தனம், எனும்

ஆரிய காரியத்தைக் கவனப்படுத்துவதே கேவலம். குரு, கவனப்படுத்துகிறார், சாஸ்திரிகளும், ததாஸ்துக் கூறுகிறார், ஆனால் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கிறார், "வயித்தாச்சாரம் இதுகள். குலாச்சாரத்தைப் பென்ஷன் வாங்கிய உடனே செய்கிறேன்" என்று, அதன்படியே, பென்ஷன் ஆனஉடனே, கிராப்பு உச்சிக்குடுமியாகி விடுகிறது, சூட் 'மருமானுக்குத் தரப்பட்டு, இவர் மதுரை வேட்டியால் பஞ்சகச்சம் கட்டிக் கொள்கிறார், பாக்கட்டைரியைப்பழையகணக்கு எழுதப் பங்கஜவல்லிச்குக் கொடுத்துவிட்டு, பாக்கட்ஸைசஸ் பகவத்கீதையை எடுத்துக் கொள்கிறார், பார்க்கர் துரைக்குப் பதிலாக பாலகிருஷ்ண ஐயரை ஜோடிசேர்த்துக் கொள்கிறார். சினிமாவுக்குப் பதிலாக, சிரவணம் செய்யச் செல்கிறார்! இந்த "மறுபிறவி" இரு பிறப்பாளருக்கு, ஏறக்குறைய 50ம் வயதிலே ஆரம்பமாகி விடுகிறது. இதற்குக் காரணம், இவர்கள் வேறு ஆச்சாரங்களிலே ஈடுபட்டிருந்த நாட்களிலேயும், 'குலாச்சாரத்தை மறந்ததில்லை என்பது மட்டுமில்லை அந்தக் குலாச்சாரத்தைக் கவனப்படுத்த அவர்களின் குருமார்கள் தவறுவதில்லை.

ஆரியர்கள், தங்கள் குலாச்சாரத்திலே, பிரேமை கொள்வதுகூட அவ்வளவு வேடிக்கை இல்லை, காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு என்பார்கள், ஆனால், நம்மவர்களிலே சிலர்கூடப், "பார்ப்பனர்கள் பழையகாலத்திலே ஆச்சார அனுஷ்டானத்தோடு, நேமநிஷ்டை தவறாமல் இருந்தனர், எனவே அவர்களுக்குக் கௌரவம் தரப்பட்டது. உயர்வாக இருந்தனர். இது கலிகாலம். பிராம்மணர்கள் ஆச்சாரத்தை இழந்து விட்டனர், எனவே அவர்களுக்கிருந்த பெருமை போய்விட்டது' என்று பேசுகிறார்களே அது மிக மிக வேடிக்கை! மற்றொன்று, "பிராமணர்கள் கெட்டுப் போய்விட்டார்கள். நாம் அவர்களைப்போல ஆச்சாரத்தை இழந்துவிடக் கூடாது, நாம் நமது குலாச்சாரத்தின்படி நடக்கவேண்டும்" என்று நம்மவரிலே சிலர் கூறிக்கொண்டு, வேடமணியத் தொடங்குவது.

இவ்வளவு வேடிக்கைகளுக்கும் காரணம் இந்த ஆச்சாரங்களைப் பற்றி வீணான "பெருமைகள்" புகுத்தப்பட்டிருப்பதுதான். ஆரியர்கள் ஆதிநாட்களிலே, ஆச்சாரங்களோடு, ஆஸ்ரமங்களிலே, வாழ்ந்தபோதும், இன்று இருப்பதைவிட, இம்மி அளவு பொதுநலனுக்காக வாழ்ந்தார்கள்என்றோ உழைத்தார்கள் என்றோ கூற, ஆதாரம் ஏதுமில்லை. குளக்கரையிலே கூடினபோதும் சரி, கோல்கொண்டோனின் கூடத்திலே உலாவியபோதும் சரி, அவர்கள், ஊரார் உழைப்பிலே, வாழ வழி அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர் என்பதற்கு எண்ணற்ற ஆதாரங்கள் உள்ளனவேயன்றி, ஊருக்குழைத்தனர் என்றோ, உன்னதமான சேவை செய்தனர் என்றோ ஆதாரம் கிடையாது. புலித்தோல் மீதமர்ந்திருந்த காலையில் பூபதிகளை அடிமை கொண்டனர், இன்று பாராளும் மன்றங்களிலே புகுந்துகொண்டு, பரிபாலிப்பவரைப்பாய்ச் சிகைகளாக்கிச் சாணக்கிய சதுரங்கமாடுகின்றனர். அந்நாளிலே ஏதோ, பயனுள்ள காரியம் செய்தனர்போலப் பேசப்படுவது, ஓர் புதிய புரட்டு! இதை நம்பி மோசம் போக வேண்டாம் என்று கூற ஆசைப்படுகிறேன். குலாச்சாரப்படி நடக்கும் ஆரியனானாலும், அது தவறிய ஆரியனானாலும், நாம், அடையும் இன்னல்வேறு வேறுமல்ல, ஒன்றுக்கொன்று இளைத்ததுமல்ல! ஆச்சாரப் பிராமணன் ஆகமத்தைக் காட்டி அடக்குவான், ஆச்சாரமிழந்தவன் எந்தெந்த சமயத்துக்கு எதெது கிடைக்கிறதோ அதைக்காட்டி, சிலசமயம், தேசீயம், வேறு சில சமயம் சமதர்மம், இன்னும் சில சமயம் கலை என்பன போல, எந்த ஆயுதம் கிடைத்தாலும், அதை எடுப்பான், நம்மவரை அடக்குவான், இஃதேயன்றி ஆரியன் வேதமோதி வாழ்ந்த நாளில், யாகயோகாதிகள் செய்திருந்த நாட்களிலே, அவன் வணக்கத்துக்குரியவனாக இருந்தானென்றும், இன்று அவன் கெட்டுவிட்டதாலேயே, அவனைத் தூற்றுகிறார்கள் என்றும் பேசப்படுவது, பழைய புரட்டைப் புதிய முறையிலே புகுத்த முயற்சிக்கும்செயல் என்பதை உணரவேண்டும். இல்லையானால், ஆச்சார அனுஷ்டானத்தினால் ஆரியன் உண்மையிலேயே உயர்ந்தவனாகி விடுகிறான், என்ற கருத்தை வளர்த்து விடுவர்! அது பிறகு, நம்மவரின் வாழ்வை வதைக்கும் நோயாகிவிடும்.

இவ்வளவு புகழ்கிறார்களே, ஆச்சார அனுஷ்டானம் தவறாமல், ஆரியர்வாழ்ந்த அந்த நாட்களை, அதுபோது ஆரியரின் தன்மை, போக்கு, நடவடிக்கை, ஏதேனும் மனிதத்தனம், (தெய்வத்தன்மை கூடவேண்டாம்!) பொருந்தியதாக இருந்ததா, என்று அறிய, பழங்கால வரலாறு, புராண இதிகாசம், அவைகளின்படி அமைக்கப்பட்ட சட்ட திட்டங்கள் ஆகியவற்றையே ஆராய்ந்து பாருங்கள்!

சுரண்டிப் பிழைத்தல், சூது பரப்புதல், சூத்திரனை மாடென நடத்துவது, என்பனவே, அன்று அவர்கள் செய்துவந்தது. சேவை அல்ல! ஜடை வளர்ந்திருந்தபோது செருக்குமிகுந்திருந்தது! கிராப்புத் தலையான பிறகு, பகிரங்கமான கெர்வத்துக்கு இடமில்லாததால், கபடம் பிறந்தது! இதுதான் மாறுதலே யொழிய, ஜடாமுடியுடன் ஆரியர் இருந்தபோது ஜன சமுதாயத்துக்குச் சேவை செய்தனர் என்று, எங்கே ஆதாரம் காட்டட்டும் பார்ப்போம். கிடையாது. அந்தவாழ்க்கை முறையே, அதற்கு இடந்தராது. குலாசாரம் கெடாமல் ஆரியர் வாழ்ந்தனர், என்றால் அதன் பொருள், அவர்கள்சந்தியாவந்தன சத்காரியங்களைச் செய்தனர் என்பது மட்டுமில்லை. சகல குலத்தினரும், அவர்களுக்குச் சேவைசெய்தனர், சேவை செய்கையில் சந்தோஷமடைந்தனர், அதற்காகவே தாங்கள் ஜென்மம் எடுத்ததாகக் கருதிக் களித்தனர். செய்தபாவம் தீர அதுவே வழியென்று நம்பினர்என்று பொருள்' எனவே, ஓர் இம்மி எதிர்ப்புமின்றி ஏக சக்ராதிபத்யம் செலுத்தினர் என்று அர்த்தம். ஆச்சாரத்தை நழுவவிடக் கூடாது என்று குருமார்கள் ஆரியருக்கு அடிக்கடி உபதேசிப்பது, அந்தப் பழையகாலைய "பரிபாலனத்தை" ஆரியபரம்பரை மீண்டும் பெறவேண்டும் என்பதற்காகவேயன்றி, உண்மையிலேயே அந்தப் பழைய ஆச்சாரங்களிலே ஏதோ மகிமை இருப்பது என்றல்ல பொருள்.

அடுத்துக்கெடுப்பது; ஆளடிமை கொள்வது, அரசுகளை அழிப்பது, ஆணவத்தைக்கொள்வது என்பன போன்ற காரியங்களே, காவி

(14-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை:

[முன்பு: தூயமணியிடம் கிழவன், தன் இளமைக்கால வரலாற்றைக் கூறுகிறான். இளமையில், ஓர் நாள் இரவு தான் கவலையுடன் படுத்துக் கொண்டு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கையில், கருப்புடை அணிந்த ஓர் உருவம் திடீரென தன் அறைக்கு வந்தது என்கிறான். பிறகு:]

"பயப்படாதீர்கள், நான்தான்"!

"நீயா? மலர்க்கோதாய், நீயா இப்படி வருகிறாய்? ஏன்? என்ன நடந்தது? பேச்சின் முடிவு என்ன வாயிற்று? உன் அண்ணாவும் மன்னனின் திட்டத்திற்குச் சம்மதித்து விட்டாரா? இல்லையா?" என்று கேள்விக்குமேல்கேள்வியாக, அடுக்கடுக்காக, அவசர அவசரமாகக் கேட்டேன். இளவரசி சிரித்தாள்.

"புறப்படுங்கள் அரண்மனைக்குச் செல்லலாம்!"

"அரண்மனைக்கா? ஏன்?"

"காளிக்கோயிலுக்குச் செல்ல!"

"காளிக் கோயிலுக்குச் செல்லவதா? எதற்காக?"

"நடந்ததை எல்லாம், இனி நடக்க வேண்டியதை எல்லாம் விவரமாக அங்குச் சொல்கிறேன்! புறப்படுங்கள், அரண்மனைக்கு."

"காளிக்கோயிலுக்குப் போக, அரண்மனைக்கேன் செல்ல வேண்டும்?"

"அங்கிருந்து செல்லும் சுரங்கத்தின் வழியாகப் போனால்தான், கோயிலிருக்கும் ரகசிய அறைகளுக்கு நாம் சுலபத்தில் போய், பதுங்கிக்கொள்ள முடியும்....புறப்படுங்கள்!"

மையிருட்டில் மாளிகைக்குச் சென்றோம்! யாரும் அறியாமல் சுரங்கத்தின் வழியாகக் காளிக் கோயிலை அடைந்தோம்!

கோயிலில் மங்கலான விளக்கொன்றுமட்டும் எரிந்துகொண்டிருந்தது! விளக்கின் பக்கத்தில் நாங்கள் இருவரும் உட்கார்ந்தோம்!

"கண்ணே, என்ன நடந்தது?"

"அண்ணா மறுத்து விட்டார், அப்பா முடித்தே விடுவதென்று முடிவு கட்டிவிட்டார்! அண்ணாவிற்குத் தெரியாமல் இன்றிரவே என்னைப் பலாத்காரமாக அழைத்துச் சென்று, சோழனின் தம்பிக்கு மனைவியாக்கி விடுவதென்றும் அவர் நிச்சயித்துவிட்டார். ஒட்டிக் கேட்டிருந்த இசைவொலி இதனை என்னிடம் கூறினாள்! இனி நாம், பாண்டிய நாட்டில்இருக்கக்கூடாது வேறெங்கேயாவது போய் விட வேண்டும். பொழுது சிறிது நேரத்தில் விடியப்போகிறது. ஆகவே இனி நாம் எங்கும் செல்ல முடியாது! நாளைமுதல் அரசனின் ஆட்கள் நம்மைத் தேடுவார்கள்! நாட்டின் நாலாபக்கங்களிலும் ஒற்றர்களும் ஆட்களும் ஓடோடியும் பார்ப்பார்கள்! தேடி அவர்கள் ஏமாந்து சிலதினங்கள் வரைக்கும் இக் காளி கோயிலையே நம் இருப்பிடமாக கொண்டிருக்க வேண்டும்! பகலில் நாம் பதுங்கி இருக்கவேண்டும் காளியின் சயன அறையில்! என்று இளவரசி கூறிமுடித்ததும், கோயிலை ஒரு முறை சுற்றிப்பார்த்தேன்! நாங்கள் உட்கார்த்திருந்த இடத்தைத்தவிர, மற்ற இடமெல்லாம், கல்லாதவனின் உள்ளத்தைப்போல, காளியின் இல்லம் இருள் மூடிக்கிடந்தது!

"இந்தக் கோயிலுக்குத் தாங்கள் வந்ததே கிடையாதா?"

"இல்லை!"

"சரி வாருங்கள், கோயிலைச் சுற்றிக் காட்டுகிறேன்!

"இருட்டிலா?"

"பகலில் வெளியே, சயன அறையை விட்டுவரமுடியாது— மறந்துவிட்டீர்களா?"

இளவரசி அந்த சிறு விளக்கை கையில் எடுத்துக் கொண்டு எழுந்தாள்! நடந்தாள்! பின்தொடர்ந்தேன்! ஒரு அறையைத் திறந்தாள்!

ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன! அறையில் மூத்து குவியல் குவியலாக கொட்டி வைக்கப் பட்டிருந்தது!

"இவ்வளவு மூத்தா?"

"ஆமாம்! மக்களிடம் வரியும், சிற்றரசர்களிடம் கப்பமும் வாங்குகிறார், மன்னர்! மன்னர் காளிக்குக் கப்பம் கட்டுகிறார்! ஆண்டு தோறும் நாட்டிலுள்ள முத்து அவ்வளவையும் விலை கொடுத்துவாங்கி இந்த அறையில் கொட்டி வைக்கிறார்! இது காளியின் சொத்து!

"அப்படியா?"

"ஆமாம்! எனக்கொரு ஆசை!"

"என்ன?"

"நமக்கு மகன் பிறந்தால், என் அண்ணனுக்குப் பிறக்கும் மகளை மணம் செய்வித்து, அவளுக்கு இதனை அன்பளிப்பாகத் தரவேண்டும்!"

"ஆகா! அப்படியே செய்யலாம்! நம் கழுத்திற்குத் தூக்குக் கயிறு தயாராகிக் கொண்டிருக்கிறது! நம் மகனுக்குக் கல்யாணம் செய்வதைப்பற்றி நீ யோசிக்கிறாய்!" என்று கூறி அவள் கன்னத்தில் தட்டிக் கொடுத்தேன். அவள் புன்னகை பூத்தாள்.

அடுத்த ஒரு அறையைக் காட்டி "இதுதான் காளியின் சயன அறை" என்றாள்!

"அப்படி என்றால்"

"காளி இந்த அறையில் தான் தூங்குவாளாம்! இதனுள் எப்பொழுதும் எவரும் நுழையக் கூடாதாம்! நுழைந்தால் அடுத்த ஜென்மத்தில் ஆமையாகப் பிறந்து விடுவார்களாம்!"

"நாம் மட்டும் ஒளிந்து கொண்டிருக்க வேண்டுமென்கிறாயே— ஆமையாகப் பிறந்துவிட மாட்டோமா?

"அடுத்த ஜென்மத்தில் தானே

# 'இல்லை' வெண்பா!

★

## கனம் கோபாலர் இயற்றியது!

★

மரணவரி போடுவதன் மூலம் ஏராளமாகப் பணம் கிடைக்கும். அந்த வரியைப் போட்டு, பணத்தை வசூலித்து, பாதியோ முழுவதாகவோ நமக்கு உதவலாம் மத்திய சர்க்கார். உதவுகிறார்களா—**இல்லை**!

அவர்கள்தான் போடவில்லை என்றால் நாமாகவாவது அந்த வரியைப் போட்டு, மாகாண நலனுக்குப் பாடுபடலாம் என்றால் அந்த வரியைப் போடும் உரிமையையாவது மத்திய சர்க்கார் நமக்குத் தருகிறதா—**இல்லை**!

ஒருக்கால் மத்திய சர்க்காருக்கு நமது கஷ்டங்கள் தெரியாமல் இருக்கலாம் அல்லது நமக்கு உதவவேண்டியது அவசியம் என்பது தெரியாமல்இருக்கலாம் என்று சிலர் கூறக்கூடும் அப்படிக் கூறுவதும் பொருந்தாது. ஏனெனில் டில்லியில் மாகாண நிதி அமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, எங்களுக்குத் தரப்படும் பண உதவி போதாது—மேலும்வேண்டும் என்று டில்லிப் பீடத்தைக் கேட்டாகிவிட்டது. கேட்டபிறகாவது தந்தார்களா—**இல்லை**!

மருத்துவக் கல்லூரிகளும் பொறியியல் (Engineering) கல்லூரிகளும் நம் மாகாணத்தில் மேலும் சில ஏற்படுத்த வேண்டும். ஆம்! அவசியம்! ஆனால், பணம்? மத்திய சர்க்கார் தரவேண்டும்! கேட்டுப் பார்த்தோம். கொடுத்தார்களா—**இல்லை**!

அதிக வருமானம் தரக்கூடிய வருமான வரி, சுங்கவரி, தபால் தந்தி கட்டணம் முதலியன யாவும் மத்திய சர்க்காருக்குப் போய் விடுகின்றன. வளரக்கூடிய, வளர்ந்துகொண்டிருக்கின்ற, வளரவேண்டிய இத்தகு வரிகள் அவர்களுக்குப் போக, மாகாண சர்க்காருக்குக் கிடைப்பதோ, வளர முடியாத, குறையக்கூடிய, நிலவரியும் ஏனைய சில சில்லறை வரிகளும்தான். ஆனால் நாட்டு வளர்ச்சிக்கான, நாட்டு நிர்வாகத்திற்கான செலவுகள் அவ்வளவையும் செய்து தீரவேண்டியவர்கள் நாங்கள். எனவேதான் வருமான வரி முதலியவற்றிலிருந்து மாகாணங்களுக்கு அதிகப் பங்கு தரும்படியாக மத்திய சர்க்காரைக் கேட்டோம்—தந்தார்களா—**இல்லை**!

* * *

சென்னை மாகாணக் கல்லூரியில், கனம் கோபால் ரெட்டியார் இந்த வாரம் பேசியிருக்கிறார். அப்போதுதான் இந்த இல்லை வெண்பாவை வாசித்திருக்கிறார்!

நம் திராவிடத்துப் பணம் வருமான வரியாகவும், சுங்கவரியாகவும், தபால் தந்தி கட்டண மூலமாகவும், ரயில்வே டிக்கட் முதலிய வழிகளாலும், மத்திய சர்க்காருக்கு, ஆண்டுக்கு 60 கோடிக்குமேல் செல்கிறது. இங்கிருந்து வரியாக டில்லிக்குச் செல்லும் இந்த நம் பணத்தின் ஒரு சிறு பகுதி டில்லி சர்க்காரால் நன்கொடையாக நம் மாகாண சர்க்காருக்குத் திருப்பித் தரப்படுகிறது. அந்த நன்கொடைத் தொகையைத்தான் கொஞ்சம் அதிகப்படுத்தவேண்டும் என்று கனம் கோபாலனார் கேட்டிருக்கிறார்—முடியாது என்று கூறியிருக்கிறார்கள் மத்திய சர்க்கார்—கடுங்கோபம் கொண்டு கனம் நிதி அமைச்சர், கல்லூரியில், தம் கணைகளை விடுத்திருக்கிறார் மத்திய சர்க்கார்மீது!

நம்பணம் 60 கோடி டில்லிக்குப் போகிறது. அதிலே ஒரு பகுதியைத் திருப்பித் தரும்படி நாம் கெஞ்சுகிறோம், டில்லியிடம்! முடியாது என்கிறது டில்லி.

எனவே தான் கோபமும் ஆத்திரமும் வருகிறது கனம் கோபாலருக்கு! நம் பணத்தை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு அவரிடமே, மீண்டும் நாம் கால் காசுக்குக்கெஞ்சவும், அவர் முடியாது என்று கூறவுமான நிலை ஏற்பட்டால் யார்தான் கோபமும் வருத்தமும் கொள்ளமாட்டார்கள்! கனம் கோபாலரும் தான் எப்படிக் கோபம் கொள்

(11-ம பக்கம் பார்க்க)

---

அதற்கு இப்பொழுது என்ன கவலை!'' என்று கூறி மலர்க்கோதை சிரித்தாள்!

''காளியின் கோயில்தான் இனி நம் மாளிகையா?''

''காளியின் கோயிலல்ல, நம் காதற் கோயில் இது!''

''கண்ணே, பொழுது புலர ஆரம்பித்து விட்டதே! காளியின் சயன அறைக்குச் செல்ல வேண்டியது தானே?',

''காளியின் சயன அறையா? அல்ல, அல்ல! இனி அதுதானே இளவரசியின் சயன அறை'' என்று கூறி என் மார்பில் மலர்க்கோதை சாய்ந்தாள்!

(தொடரும்)

# ஆரிய மாயை, அமெரிக்காவில்!

நான்முகன் படைப்பிலே நான் முதல் ஜாதி, உயர் ஜாதி! நீ, கீழ் ஜாதி, இழி ஜாதி!

நான் பிராமணன்! நீ சூத்திரன்!

நான் உயர்குடிப் பிறந்த உத்தமன். நீ தாழ்ந்தகுடிப் பிறந்த சிறுமகன்!

நான் பிரம்மனின் முகத்திலே உதித்தவன் — எனவே பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியோன். நீ அவன் காலிலே பிறந்தவன்—எனவே இழிவுக்கும் சிறுமைக்கும் உரியவன்.

நான் வாழப் பிறந்தவன்! நீ மேல்ஜாதிக்கு உழைத்து மாளப் பிறந்தவன்!

நீ, நீசன்! தாசன்! சூத்திரன்! பறையன்! தொடாதே என்னை!

கிட்டே வராதே! நான் உண்ணும்போது பாராதே! பார்த்தால் என் உணவு தீட்டுப்பட்டுப்போம். தொலைவே நட! தொலைவே கிட! உன் நிழலும் என்மீது படக்கூடாது! ஒதுங்கிப் போ!

நான் யார் தெரியுமா? பூதேவன்! நடமாடும் தெய்வம். ஆண்டவனின் அருமந்த பிள்ளை. இருபிறப்பாளன். தெய்விகநூல் ஒன்று என் மார்பில் உண்டு. அந்த நூல் என் மார்பகத்தில் ஏறும்போது நான் மனித வடிவிலிருந்து மாறி தெய்வ வடிவமாகிறேன். அதுதான் என் இரண்டாம் பிறப்பு. நீ சாதாரண மானிடன். ஒரே பிறப்பு உனக்கு—மனிதப் பிறப்பு. என் போல தெய்வப் பிறப்பு உனக்கு இல்லை.

போ! போ! எட்டி நில்! தொடாதே! தூரப் போ! டே செட்டி, டே முதலி, டே நாய்க்கா, ஒத்திருடா! ஒதுங்குடா! விலகுடா! எட்டப்போடா!

* * *

ஆரியம், இதுபோலத்தான் பன்னெடுங்காலமாக நாட்டில் ஆணவ உரைகளைப் புகன்று வந்தது. இன்றுங்கூட ஏமாந்த தோழர்கள் உலவும்இடங்களில் பட்டிதொட்டிகளில், கிராமங்கள் போன்ற இடங்களில், படிப்பறியா மக்களிடை, உலகம் அறியாத தோழர்களிடை, ஆரியம், இந்த நிறவெறிப் பேச்சை, முழக்கத் தவறுவதில்லை. ஆனால் வெளிப்படையாக, முன்போல, உரத்த குரலெடுத்து ஊரெங்கும் இந்த வர்ணாஸ்ரம தத்துவத்தை உபதேசிக்க முடிவதில்லை ஆரியத்தால்! அன்று போல, பஞ்சாங்க தர்பார் நடத்தவும் முடிவதில்லை' காரணம், நாட்டிலே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியும் திராவிட இன எழுச்சியும்தான்!

இந்த முப்பதாண்டுகளாக திராவிடர் இயக்கம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், 30 ஆண்டுகளுக்கு முன்னால் தியாகத்தின் சின்னம் டாக்டர் நடேசன் திராவிடர் சங்கம் என்ற பெயரால் ஓர் அமைப்பை உருவாக்கிய காலத்திலிருந்து இன்றுவரை ஆரிய எதிர்ப்புப் போர் இவ்வளவு மும்முரமாகவும் துணிவாகவும் நடத்தப்படாமல் இருந்திருந்தால், ஆரிய ஆணவம் இன்றுகூட, முன்னாள் போலத்தான், தன், இறுமாப்புச் செங்கோலை ஓச்சியபடி இருந்திருக்கும்.

ஆனால், இன்று, ஆரியம், இந்த நாட்டில், திராவிடர் இயக்கத்தின் அயராத உழைப்பின் காரணமாக, அதன் நச்சுப்பல் பிடுங்கப்பட்டு, அதன் ஜீவசக்தி முறியடிக்கப்பட்டு, அதன் ஆற்றல்வேகம் அழிக்கப்பட்டு, மூலையில் கிடந்து முகாரி பாடும்முணுமுணுப்பு நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

ஆரியம், இன்று, இங்கு, இப்படி! ஆனால் இதே நேரத்தில்: அமெரிக்காவிலும் ஆப்ரிக்காவிலும், அதன் கோர தாண்டவம் நடந்தபடி இருக்கிறது!

அங்கே ஒரு திராவிடர் இயக்கம் தேவை அதை அடக்க! அங்கே ஒரு டாக்டர் நடேசன், ஒரு தியாகராயர் தோன்ற வேண்டும் அதற்கு மரண தண்டனை விதிக்க!

ஆரியம், அதாவது நிறவெறி, விவரமாகக் கூறவேண்டுமானால், என் தோல் வெளுப்பாம், உன் தோல் கறுப்பாம் என்ற ஆணவ மனப்பான்மை, நான்மேல்ஜாதி —நீ கீழ் ஜாதி என்ற பஞ்சாங்க வாதம், அமெரிக்காவிலும் தென்னாப்ரிக்காவிலும் இது போது வெள்ளை வேதியர்களால் வெட்கமின்றிக் கையாளப்படுகிறது.

ஆப்ரிக்காவில், அந்த நாட்டு முதலமைச்சர் டாக்டர் மலான் இருபதாம் நூற்றாண்டின் மனுவாக இருக்கிறார்! ஒரு குலத்துக்கொரு நீதி வகுக்கிறார்! வெள்ளையர்கள் வாழும் இடங்களிலே இந்தியர்கள் வாழக்கூடாதாம்! தனி 'சேரி' அமைத்துக்கொண்டு, தனியான் இடத்தில் வாழவேண்டுமாம் இந்தியர்கள்,—சட்டம் நிறைவேற்றி

யிருக்கிறார் மலான், இங்கே ஆரியம், ஆதித்திராவிடர்களுக்கு தனிச் 'சேரி' அமைத்துக் கொடுத்திருக்கிறதல்லவா அது போல!

வெள்ளையர்கள் வாழும் இடங்களிலே நிலம் வாங்கக் கூட, மனை எழுப்பக்கூட உரிமை கிடையாதாம் இந்தியருக்கு! ஓட்டுரிமை கிடையாதாம்! சட்டசபைக்குச் செல்லும் உரிமை கிடையாதாம்! எவ்வுரிமையுமற்று நடைப்பிணங்களாக வாழ வேண்டுமாம் அவர்கள்-இங்கு, சேரிகளில் சிதையும்படி ஆரியத்தால் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டுள்ள ஆதித்திராவிடர்தம் நிலைமை போல!

நிறவெறி, அமெரிக்காவிலும் இதே போலத்தான் காணப்படுகிறது.

பால் ரோப்சன், நீக்ரோ இனத்தவர். ஆனால் அரிய இசைவாணர். அவர்தம் கீதம் உள்ளம் உருக்கும் தன்மையது. அவருடைய இசை விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது நியூயார்க் நகரில். அதுவும் பால் ரோப்சன், தனக்குச் சொந்தத்திற்குப் பணம் திரட்டுவதற்காக அல்ல அந்தக் கச்சேரிக்கு ஒப்புக்கொண்டது. அது ஓர் உதவிக் கச்சேரி. குடியாட்சி உரிமைக் கழகத்திற்கு நிதி சேர்த்துத் தருவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை அரங்கு அது.

வெள்ளையர்கள் 5000 பேர், நிறவெறி பிடித்தவர்கள், நடமாடும் மனுக்கள், ஆம், அந்த நாட்டு சனாதனிகள், கச்சேரி தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னால், 'இசை அரங்கு' மீது படையெடுத்தனர்—நாற்காலிகளுக்குத் தீ வைத்தனர்—பாட்டுக்கச்சேரி மேடையைத் தகர்த்து எறிந்தனர்—பல மோட்டார்களைத் தூள் தூளாக்கினராம்! பாறாங்கற்கள், தடிகள், கத்திகள், ஏனைய கருவிகளுடன் புகுந்து, இசை கேட்கக் குழுமியிருந்த அனைவரையும் படுகாயப்படுத்தினராம்!

இந்த ஐயாயிரம் வெள்ளை வேதியர்கள் இவ்வண்ணம்வெறியாட்டம் ஆடியதற்கெல்லாம் உள்ள ஒரே ஒரு காரணம், அன்றைய தினம், அங்கு இசை விருந்தளிக்க இருந்தவர்—பால் ரோப்சன்—ஒரு நீக்ரோ என்பதுதானாம்!

இசை விருந்தளிப்பவர் யாராய் இருந்தாலென்ன—இசைதானே முக்கியம்—நல்லிசையைக் கேட்க வேண்டியது தானே ரசிகர்கள் கடமை என்று கேட்கத் தோன்றும் நமக்கு! ஆனால் வெறியாட்டமாடிய அந்த வெள்ளையர்கள் நிறவெறி பிடித்தவர்கள்; ஒரு நீக்ரோ, ஒரு இழிசாதிக்காரன் பாடுவதா, அவனுக்கு அருகே இருந்து, அவனைத் தம்முடன் சரி சமமாக உட்கார வைத்துக் கொண்டு, பல வெள்ளையர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருப்பதா என்ற ஆணவ நினைப்புக் கொண்டவர்கள். ஆகவே அவர்களுக்கு இசை, முக்கியமானதாகத் தெரியவில்லை. நிறவெறி தான் அவர்கள் உள்ளத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது.

அவர்கள், கம்யூனிசம், அதாவது பொதுவுடைமைத் தத்துவம் ஒழியவேண்டும் என்று கூட முழக்கமிட்டார்களாம்! இயற்கைதானே! வைதீக வெறி முதலாளித்துவ மமதையின் மூத்த தோழன்தானே! ஏன் முழக்கமிட மாட்டார்கள்!

ஆரிய மாயை, அமெரிக்காவிலும் இருக்கிறது! அதை ஒழிக்க, அங்கொரு திராவிடர் இயக்கம் தோன்றவேண்டும்!!

---

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

நிற்கிறாரே, கனம் கோபாலர், அந்த நிலையும் அன்று இராது!

இன்றையதினம் நம்மாகாண மொத்த வருமானத்தில்கிட்டத்தட்ட பாதி டில்லிக்குப் போய் விடுகிறது. மிச்சம்பாதியில்தான் இந்த மாகாண வாழ்வு நடந்தாக வேண்டியிருக்கிறது. இரண்டு கைகளிலே ஒன்றை இழந்துவிடுவது போன்ற நிலை! இந்த நிலை ஏன் நீடிக்க வேண்டும்?

திராவிடத் தனியரசு உருவானால், எவ்வளவுவளம், வாழ்வு இன்பம், பொருள், நமக்கு உருவாகும்!

என்றாலும் கனம் கோபாலருக்கு ஏனோ தெரியவில்லை திராவிடத் தனியரசு என்றாலே கசக்கிறது—ஏக இந்தியா என்றால் இனிக்கிறது!

ஆனால் ஒன்று! அவர் இன்று பாடுகிறாரே இல்லை வெண்பா! இந்த வெண்பாவின் கடைசிவரி தான் திராவிடத் தனிநாடு என்பது. அந்தக் கடைசி வரிக்கு அவர் வந்து சேரும் நாள் அதிக தொலைவில் இல்லை..

அது அவருக்குத் தெரியாது—ஆனால் நமக்குத் தெரியும். ஏனெனில் நாமும் கூட எடுத்தவுடனே திராவிடநாட்டுப் பண் பாடத் தொடங்கியவர்கள் அல்ல! முதலிலே பல ஆண்டுகள், இன்று கனம் கோபாலர் பாடும் இந்த **இல்லை வெண்பாவைப்** பாடிவிட்டுத்தான் அதன் தொடர்ச்சியும் வளர்ச்சியும் ஆன திராவிடநாட்டுக்கீதத்திற்குவந்து சேர்ந்திருக்கிறோம். நாம் வந்த அதே பாதையில்தான் கனம் கோபாலரும் பயணம்தொடங்கியிருக்கிறார். எனவே நாம் வந்துள்ள அதே முடிவுக்குத்தானே அவரும் வந்தாகவேண்டும்!

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆவணி 18
3—9—49 சனிக்கிழமை

# கையிருப்பு கரைகிறது!

"சம்பளம் ரூபா நூறு வாங்கினேன்! அதிலே ரூபா அறுபதை கிண்டி குதிரைக்கு அழுதேன். ஐந்து ரூபாய் சிடிசினிமா தியேட்டருக்கு அர்ப்பணித்தேன். மூன்று ரூபாய்க்கு ஒரு நாடகம் பார்த்தேன். பத்து ரூபாய் செலவில் நண்பர்கட்கு ஒருவிருந்துவைத்தேன். இசைக் கச்சேரி பார்த்தேன் இடையில் ஓர்நாள்—கச்சேரி என்றால் சும்மாவா—அது ஒரு ஐந்து ரூபாவை சாப்பிட்டுவிட்டது—சிகரெட் செலவோ எனக்கு மாதம் நாற்பதுக்குக் குறையாது—கையிலிருக்கும்பணமோ ரூபாய் 17 தான்—இது எப்படிப் போதும் எனக்கு—சிகரெட்டுக்கே போதாதே இது! இன்னும் வீட்டுச் செலவு வேறு இருக்கிறது—"அவள்" வேறு தொந்தரவு பண்ணிக்கொண்டிருக்கிறாள்—பருப்பு இல்லை, புளி இல்லை, மிளகு இல்லை, மிளகாய் இல்லை என்று! எல்லாமாகச் சேர்த்து இன்றுகாலை என் நண்பன் முருகேசனிடம் ஒரு எண்பது ரூபா கடன் வாங்கி யிருக்கிறேன். வாங்காமல் வேறென்ன செய்வது?"

இதுபோலப் பேசும் நண்பர்கள் பலரைக் கண்டிருப்பீர்கள். அப்படிப்பட்ட நண்பர்களின் நிலையிலேதான் இருக்கிறது இந்திய சர்க்கார் இன்று!

வாங்கியசம்பளத்தை, தேவையான பண்டங்களைப் பெறுவதற்குச் செலவு செய்யாமல், விருந்துக்கும் வீண் கேளிக்கைக்கும், சினிமாவுக்கும் ஓயாத சிகரெட் புகைக்கும், நாடகத்திற்கும் கச்சேரிக்கும், கிண்டிரேசுக்கும், சர்க்கஸ் தமாஷாவுக்கும் செலவழித்துவிட்டு, கடைசியில் வீட்டுச் செலவுக்குப் பணமில்லாமல் கடன்வாங்கும் கண்ணியவான்களைப் போலத்தான் இந்திய சர்க்காரும் நடந்து கொண்டிருக்கிறது.

வெள்ளையர்கள், இன்றைய ஆளவந்தார்களிடம் நாட்டாட்சிப் பீடத்தை ஒப்புவித்துவிட்டுச் சென்றபோது, பொக்கிஷத்தைக் காலியாக வைத்துவிட்டுச் செல்லவில்லை. செலவெல்லாம் போக ரூபா 310 கோடி இருந்தது—அந்தப் பணத்தை, இருப்பை, வைத்துவிட்டுத்தான் சென்றார்கள்.

அந்த 310 கோடி, இன்றைய தினம் ரூபா 100 கோடியாகக் குறைந்துவிட்டிருக்கிறது. 210 கோடி ரூபாய் இந்தியா விடுதலை பெற்ற இந்த இரண்டாண்டுகளில் எப்படி எப்படியோ மறைந்துவிட்டிருக்கிறது!

1947 ஆகஸ்டு 15ம் தேதி 310 கோடியாக இருந்த கையிருப்பு, 1948 ஏப்ரல் 1ல் 226 கோடியாகி, 1949 ஏப்ரல் 1ல் 128 கோடியாகக் குறைந்து இந்த ஆகஸ்டு 15 அன்று 100 கோடியாகத் தாழ்ந்திருக்கிறது.

"ஹிந்து" பத்திரிகை சென்றவாரம் எழுதி யிருக்கிறது, ஏதாவது அதிசயம் அல்லது எதிர்பாராத திடீர்சம்பவம் நிகழ்ந்தாலொழிய இந்த நூறுகோடி ரூபாயும் இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகக் கரைந்துபோவது நிச்சயம் என்று.

ஆம்! விடுதலை, இந்தியாவுக்குக் கிடைத்து ஆண்டுகள் இரண்டுதான் முடிந்தது. ஆனால் இந்த இரண்டாண்டுகளுக் குள்ளாகவே கையிருப்புத் தொகை ரூபா 310 கோடியில் 210 கோடி கரைந்து போய்விட்டது. ஏதாவது அதிசயம் அல்லது அற்புதம் ஏற்பட்டாலொழிய மிச்சத் தொகையும் கரைந்தொழிவது நிச்சயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்திய சர்க்காருக்கு இந்த இரண்டாண்டுகளில் வருமானம் இல்லையா—இல்லை, இல்லை, வருமானம் ஏராளம்.

புதுவரிகள் போடாமல் இருந்தனரா? போட்டனர் போட்டனர்! எத்தனையோ வரிகளைப் போட்டனர்! தபால் கட்டணங்களைக்கூட உயர்த்தினர். $1\frac{1}{2}$ அணா கவர் 2 அணா ஆயிற்று. அரையணா கார்டு முக்காலணா கார்டாயிற்று.

மாகாண சர்க்கார்களுக்கு அளவுக்கு மீறிப் பணம் கொடுத்து உதவி விட்டனரா—அப்படிக் கூறுவதற்கும் இல்லை—தங்களுக்குக் கொடுக்க வேண்டியதைவிட மிகமிகக் குறைவாகத்தான் தருகிறார்கள் மத்தியசர்க்கார் என்று நம்மாகாண நிதி அமைச்சர் கோபால்ரெட்டியார் இந்தவாரம்கூட பேசியிருக்கிறார்.

உணவுப் பஞ்சம் தீரவில்லை—உடைப் பஞ்சம் போகவில்லை—நாட்டிலே பசி மறையவில்லை, பட்டினி பட்டினி என்று பாட்டாளிகளின் பட்டாளம் எழுப்பும் கூக்குரல் குறையவில்லை—விலைவாசிகள் இறங்கவில்லை—வளம் மக்கள் வாழ்க்கையில் ததும்பவில்லை—தொழில்கள் பெருகவில்லை—சமுதாயத்திலே

இன்பம் தவழவில்லை—பொது மக்கள் நிலை இரண்டாண்டுகட்கு முன்பு இருந்ததைவிட இன்று உயர்ந்திருக்கிறது . என்றோ, அவர்களுக்கு அன்று இருந்தகஷ்டங்களில் ஒன்றாவது இன்று குறைந்திருக்கிறது என்றோ யாரும் கூறமுடியாது—மக்கள் நிலையை மடமடவென உயர்த்துவதற்காக ஊராள்வோர் ஓடோடியும் பணி புரிந்தனர், எனவே தான் பணம் பறந்துவிட்டது என்று புகன்றிடவும் முடியாது—என்றாலும் கை இருப்பு கரைந்துபோயிருக்கிறது. கொஞ்சநஞ்சம் அல்ல, ஒரு கோடி இரு கோடி அல்ல, 210 கோடி!

கேவலம் அகதிகள் பிரச்சினை கூட இன்னும் தீரவில்லை! சென்ற மாதம்தான் இரண்டாயிரம் அகதிகள், பிரதமர் நேருவின் இல்லத்தின்முன் கூடி, எங்களுக்கு வாழ்க்கை வசதி தாருங்கள், இருக்க இடம் தாருங்கள், வாழ வழி கூறுங்கள், பிரதமரே துணை புரிய வாருங்கள் என்று முழக்கமிட்டு ஆர்ப்பரித்தனர் என்று பத்திரிகைகளில் சேதி வந்திருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினையால் தான் பணம் முழுதும் கரைந்துவிட்டது என்று கூறுவதும்பொருந்தாது.

காஷ்மீர் பிரச்சினைகூட முடியவில்லை—என்றாலும் 210 கோடி 'அவுட்'!

ஏன் இந்த நிலை? என்ன காரணம்?

ஆண்டுதோறும் 'வரிகள்' மூலம் மத்திய சர்க்காருக்கு 300 கோடிக்குமேல் வருமானம் வருகிறது. அது முழுவதும் செலவாகி, கையிருப்புத் தொகையும் செலவாகும் மாயமென்ன?

210 கோடி ரூபாய், இரண்டே ஆண்டுகளில், பகலவன் வரவுகண்ட பனிபோல, மறைந்துபோன விசித்திரம் ஏன் நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது?

பணம் பறக்கிறதே இது போல, என்றாலும் ஏன் இன்னமும்கூட, வெளிநாடுகளில்உள்ள இந்திய சர்க்காரின் தூதுவர்கள் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து கொண்டு, குட்டிக் குபேரர்கள்போல வாழும் ராஜபோக வாழ்வுக்கும், அவர்கள் கோலாகலப்போக்குக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படவில்லை?

ஏன் கவர்னர் ஜெனரலின் சம்பளம் இன்னமும் இமயமலை போல உயர்ந்திருக்கவேண்டும்?

சர்க்காரே நியமித்த 'சிக்கனக் கமிட்டி', நிலைமையை நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து, மத்திய சர்க்காரின் காரியாலயச் செலவைக் குறைக்க எத்தனையோ வழிமுறைகளை வகுத்துத் தந்தும்கூட ஏன், மத்திய மந்திரிகள் தத்தம் அலுவலகச் செலவைக் குறைக்க மறுக்கிறார்கள்?

தம்முடைய காரியாலயச் செலவைக் குறைத்தால் தம் மந்திரிபதவியையே ராஜிநாமா செய்வதாக ஓர் அமைச்சர் மிரட்டுகிறாராமே, ஏன் அப்படி?

வெளிநாட்டுத் தூதர்களின் டாம்பீக வாழ்வையும், டில்லி சர்க்கார் அலுவலக அதிக செலவையும் குறைத்தாலே ஆண்டுக்கு 20 கோடிக்கு மேல் பணம் மிச்சமாகுமாமே! ஏன் அது இன்னமும் செய்யப்படவில்லை?

இரண்டாண்டுகளுக்கு முன்பு, வெள்ளை சர்க்கார் இங்கிருந்தபோது, வந்த வருவாயைவிட அதிக வருவாய்தானே இன்று வருகிறதுமத்திய சர்க்காருக்கு. அப்படியானால், அன்று அவர்கள், செலவுபோக பணம் மிச்சம் பிடிக்க, இன்று இவர்கள், கையிருப்பையே கரைத்துக் கொண்டிருக்கும் காரியத்தின் கருத்தென்ன? காரணமென்ன?

விடை கூறுவார்களா வீர ஜவஹர் சர்க்கார்? ,பதில் பகர்வார்களா பாரத புத்திரர்கள்?

இல்லை, இவனென்ன குறுமாறு, எப்போது பார்த்தாலும் கேள்வி கேட்பதுதான் இவன் வேலை என்று 'கேலி' பேசிவிட்டு கையிருப்பைக் கரைக்கும் திருப்பணியிலேயே ஈடுபடப் போகிறார்களா?

* * *

இந்தத் தலையங்கம் அச்சுக்குப் போகுந்தறுவாயில், இந்திய சர்க்கார், தங்களுடைய அபரிமிதமான செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், ரூபா 3000க்கு மேல் சர்க்காரில் யாருக்கும் சம்பளம் கிடையாது என்று திட்டம் தீட்டவும் முன்வந்திருப்பதாக ஒரு சேதி வந்துள்ளது. இந்தச் சேதி உண்மையாக இருக்குமானால் நாம் பெரிதும் மகிழ்ச்சியடைவோம். ஆனால் எந்தெந்த ஏடுகளில் இந்தச் சம்பளக் குறைப்புச் சேதி வந்துள்ளதோ, அதே ஏடுகளில், அந்தச் "சேதி"க்குக் கீழேயே, "சம்பளக் குறைவு சம்பந்தமாக முடிவு எதுவும் இன்னும் செய்யப்படவில்லை என்று நமக்கு வந்துள்ள மற்றொரு செய்தி கூறுகிறது" என்ற வாக்கியம் காணப்படுகிறது—என்வே, சம்பளக் குறைப்புச் சேதியும், செலவு வெட்டுப் பிரேரேபணையும் உண்மையா அல்லது தினசரி ஏடுகளின் வெறும் சரடா என்பது இனித்தான் தெரிய வேண்டும். எது எப்படியிருந்தாலும், மத்திய சர்க்காரின் இப்போதைய ஊதாரித்தனமான செலவுத்திட்டங்களும் வெளிநாட்டுத் தூதர்களின் டாம்பீக ராஜபோக செலவும் உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும். மத்திய சர்க்கார் காரியாலயங்கள் அளவுக்கு மீறிப் பெருத்துப் போயிருப்பதையும் உடனடியாக நிறுத்தியாக வேண்டும்.

# விசாரணை அல்லது விடுதலை! இரண்டே வழிகள்!

★

"விசாரணை செய்! அல்லது விடுதலை செய்!"—மிக மிகச் சாதாரணமான வாசகம் இது என்றுதான் எவரும் கூறுவர். ஆனால் இந்த மிக மிகச் சாதாரணமான வாசகத்தை ஒலித்த குற்றத்திற்காகத்தான் அந்தப் பரிதாபத்திற்குரிய பாட்டாளித் தோழர்கள் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், போலீஸ் பாய்ச்சல், சித்திரவதை ஆகிய சுயராஜ்யப் 'பரிசு'களைப் பெற நேர்ந்திருக்கிறது.

அவர்கள் குற்றவாளிகள் அல்ல. அவர்கள் கொலைகாரர்கள் அல்ல, அவர்கள் திருடர்கள் அல்ல. அவர்கள் 'ஜேப்படி' செய்தவர்களல்ல. சட்டப்படி எந்தவிதமான குற்றமும் புரிந்தவர்கள் அல்ல அவர்கள்.

அவர்கள்மீது இதுவரை எந்த வித குற்றமும் ருஜுவாகவில்லை. அவர்களை, இந்த ஆட்சியாளர்கள், எந்த வழக்குமன்றத்திலும் கொண்டுவந்து நிறுத்தி, அவர்கள் செய்த குற்றம் இது என்று ஒருபோதும் கூறியதில்லை. கூறமுடியாது அவர்களால். கூறுவதற்கு ஏதும் ஆதாரம் கிடையாது. அவர்களிடம்.

ஆளவந்தார்கள் அவர்களைச் சிறையிலே வைத்திருக்கவிரும்பினார்கள், ஆகவே சிறைப்படுத்தினார்கள்.

ஆளவந்தார்களின் இந்தவிருப்பத்தைத் தவிர, அவர்கள், அந்தப் பாட்டாளித் தலைவர்கள்—தோழர்கள், சிறையிலே இருப்பதற்கு வேறு நியாயமான காரணம் எதுவுமே கிடையாது. இருப்பதாக யாரும் இதுவரை கூறியதுமில்லை.

"இன்ன இடத்தில், இன்ன நேரத்தில், இன்ன வகையில், இன்ன குற்றத்தை இவர்கள் புரிந்தார்கள்" என்பதாகயாரும் இதுவரை புகன்றது கிடையாது.

அவர்கள் கம்யூனிஸ்ட்டுகள், நாசவேலைக்காரர்கள், ஆகவே சிறையில் இட்டிருக்கிறோம் அவர்களை என்றுதான் இதுவரை ஆட்சியாளர்கள் ஆயிரமாயிரம் முறை கூறி யிருக்கின்றனரே தவிர மற்றபடி அவர்களுடைய குற்றம் இன்னது என்று கூறியது கிடையாது.

ஒருவர் கம்யூனிச கருத்துக்களை ஆதரிப்பது குற்றமல்ல—மக்கள் வாழ்க்கையில் இன்பம் எக்களிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் படைத்த யாரும் பொதுவுடைமைத் தத்துவங்களை ஆதரித்துத்தான் தீருவர். ஆகவே, ஒருவர் பொதுவுடைமை எண்ணங்களை தன் உள்ளத்திலே கொண்டிருக்கிறார், ஆகவே அவரைச் சிறையில் வைத்திருக்கிறோம் என்று யாராவது கூறுவார்களானால் அது பித்தத்தின் முதிர்ச்சியே தவிர வேறில்லை.

கம்யூனிச கருத்துக்களை ஆதரிப்பது தவறல்ல—அந்தக் கருத்துக்களை ஆதரிப்பதும் ஆதரிக்காமல் இருப்பதும் அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது—ஆனால் நாங்கள் சிறைப்படுத்த விரும்புவது கம்யூனிஸ்ட் கட்சியினரைத் தான் என்று ஆசியாளர்கள் கூறுவார்களானால் அதுவும் தவறான கருத்துத்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஒரு சர்க்கார், ஒரு தனி மனிதரைச் சிறைவைக்க முன் வந்தால், அப்படி முன்வரும் போது, அந்தத் தனி மனிதர் செய்த குற்றம் இன்னது என்பதை வழக்கு மன்றத்தில் நிலை நாட்டி பிறகு சிறைக்குள் வைப்பதுதான் முறையே தவிர, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு தனி மனிதரைச் சிறைவைப்பது அறிவுடைமையல்ல. நல்லாட்சி முறையும் ஆகாது.

"அல்ல அல்ல! இப்போது விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்கள். சிறையில் வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாய் இருக்கிறார்கள் என்பதல்ல. ஆனால் அவர்கள் பலாத்கார வேலைகளிலும் நாச காரியங்களிலும் ஈடுபட்டவர்கள், அதற்காகத்தான் அவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று ஆட்சியாளர்கள் ஒருக்கால் கூறக்கூடும். அப்படியானால், அவர்கள் பலாத்கார வேலைகளில் ஈடுபட்டிருந்தது உண்மையானால், அதை நிரூபிக்க முடியும் என்ற தைரியம் சர்க்காருக்கு இருக்குமானால், ஏன் அந்தத் தோழர்களை வழக்குமன்றத்தில் கொண்டுவந்து விசாரிக்கக் கூடாது?

அவர்களை வழக்கு மன்றத்தில் கொண்டுவந்து விசாரிக்காததிலிருந்தே அவர்கள் மீது போதுமான குற்றச்சாட்டு சுமத்த ஆதாரம் எதுவுமில்லை ஆளவந்தார்களிடம் என்பது தெளிவாகத் தெரிகிறதே!

இன்ன குற்றம் புரிந்தனர் என்பதே சொல்லப்பட முடியாத நிலையில் ஆயிரக்கணக்கான தோழர்களை, சிறையில், ஆண்டுக்கணக்கில் வைத்திருப்பது நியாயம் என்று, ஜனநாயகவாதிகள் எப்படிக் கூறமுடியும்?

ஒரு பாசிஸ்டு சர்க்கார் இப்படி நடந்துகொண்டால் அது இயற்கை. ஒரு ஹிட்லர் சர்க்கார் இப்படி நடந்துகொண்டால் அது எதிர்பார்க்கப்பட வேண்டிய சாதாரண சம்பவம். ஒரு வெல்லிங்டன் சர்க்கார் 'விசாரணையின்றிக் காவல்' முறையைக் கையாண்டால் அதைக் கண்டு யாரும் வியப்படையமாட்டார்கள். ஆனல் உத்தமர்காந்தியாரின் புகழை, பெயரை, செல்வாக்கை, புனிதத் தொண்டை துணையிட்டு ஆட்சிப்பீடம் ஏறிய ஒரு கூட்டம், ஒரு கட்சி, இப்படி நடந்து கொண்டால, இதை எப்படி, மனிதப்பண்பும் நாகரிக இயல்பும் கொண்ட எவர்தான் பொறுத்துக்கொள்ள முடியும்?

நேர்மை வழியில் நடக்கும்நற்பண்பு இந்த நாடாளும் "நல்ல தம்பி' களுக்கு இருக்குமானல் அவர்கள் செய்ய வேண்டிய முதல் வேலை, விசாரணையின்றி, சிறையில் செத்து மடியும் ஆயிரக்கணக்கான தோழர்களை உடனே விடுதலை செய்துவிட வேண்டும். ஏனெனில் அவர்கள் மீது இதுவரை எந்த குற்றமும் ருஜுவாகவில்லையாகையால்!

அல்லது அவர்கள் இன்னின்ன குற்றங்களைப் புரிந்திருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டி ஆதாரபூர்வமாக வாதாட இந்த சர்க்காரிடத்தில் சரக்கு இருக்குமானல் வழக்கு மன்றத்தில் அவர்களைக் கொண்டுவந்து நிறுத்தி நீதி தேவர்களின் சுதந்திர முடிபுக்கு அவர்களை விட்டுவிட வேண்டும்.

இதுதான் முறை.
இதுதான் நியாயம்.

இதைத்தான் செய்யும்படிக் கேட்டனர் சென்ற திங்கள் சிறையில் கிடக்கும் அந்தத் தோழர்கள்.

இப்படிக் கேட்ட குற்றத்திற்காகத்தான் வேலூர்—கடலூர் சிறைகளில் இருக்கும் பாட்டாளி நண்பர்கள்மீது போலீஸ் படை வரிசையை ஏவியிருக்கின்றனர் இந்த சர்க்கார்.

சிறையிலே, புழுவும் பூச்சியும் நெளியும் கஞ்சியைக் குடிக்க முடியாமல் குடித்து, இரவில் இருட்டறைகளில் பூட்டப்பட்டு இருண்ட வாழ்வு வாழ்ந்து காரணமின்றி,சிறுகச் சிறுகச்சாகும் நிலைமைக்கு ஆளவந்தார்களால் ஆளாக்கப்பட்டுவிட்ட அந்தப் பாட்டாளிகளின்மீது, சிறையில் தடியடி நடத்துவது முற்றிலும் வெறுக்கத்தக்க செயல்.

சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளிடம் இப்படி சிறுமைத்தனமான முறையில் இந்த ஆளவந்தார்கள் நடந்து கொண்டிருப்பதையும், இதன் விளைவாக எண்ணற்ற தோழர்கள், படுகாயம் அடைந்து வெறுந்தரையில் கிடந்து வைத்திய வசதியின்றி புரளும் 'கோரம்' உருவாகியிருப்பதையும், தோழர் ஜீவா, அனந்த நம்பியார் M. L. A. போன்ற பொறுப்புள்ள தலைவர்களிடமும் இதே முறையில் சர்க்கார் நடந்துகொண்டிருப்பதையும் கேள்விப்படும்போது நம் மனம் பதறுகிறது.

இப்படிப்பட்ட ஆட்சியாளர்களால் ஆளப்படும் "துர்ப்பாக்கியமான" நிலை நமக்கு நேரிட்டதே என்பதை எண்ணும்போது நம் நெஞ்சம் வேதனைப்படுகிறது

ஜனநாயகமே! உன்னைச் சித்திரவதை செய்யத்தான் இந்தக் காங்கிரஸ் பிறந்திருக்கிறதா? வாய் திறந்து பேசு! வழுக்கி விழுந்த இந்தக் காங்கிரசுக்கு அறிவுரைகூறு!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாமல் இருப்பார்!

கோபம் கொள்கிறார்! நியாயம்தான் அது!

ஆனல் பலன்?

இவருடைய கோபத்தை மதிக்க மறுக்கிறதே டில்லி! அலட்சியப் படுத்துகிறதே, இவரே கூறுவதுபோல!

நம் பணத்தைக் கொடுத்துவிட்டு நாமே கெஞ்சுவது டில்லியிடம்! ஏன் இப்படி? இங்கிருந்து செல்லும் நம் பணத்தை நாமே வைத்துக்கொண்டால்...? டில்லிக்குச் செல்லும் 60 கோடியும் இங்கேயே தங்கினல்.......!

ஒரு கணம் நினைத்துப் பார்க்கட்டும் கனம் கோபாலர்.

60 கோடி! அவ்வளவும்கனம் கோபாலரிடமே தங்குமானல், எவ்வளவு நன்மை செய்ய முடியும் சென்னை மாகாணத்திற்கு! இப்போதோ, அவ்வளவும்டில்லிபுரிக்குப் போகிறது. போய் திரும்பிவா மறுக்கிறது. அந்த அறுபது கோடியில் சில கோடிகளையும் தர 'பிகுவு' பண்ணுகிறது டில்லி. அவ்வளவும் இங்கேயே தங்கினல்...?

மாகாணம் செழிக்கும். மக்கள் வாழ்வு வளமுறும். இன்பம் இங்கு கொழிக்கும்.

அவ்வளவும் இங்கே தங்குவதற்குரிய ஒரே வழி, இங்கிருந்து அங்கு போகாவண்ணம் பணம் நிறுத்தப்படுவதற்குரிய ஒரே மார்க்கம், உறுதியான பாதை, **திராவிடத் தனி நாடு!** ஆம், அதுதான்!

திராவிடநாடு தனி நாடாகி, டில்லிப் பிணைப்பிலிருந்து விடுபட்டு, தனியரசு செலுத்துமானல், இந்த 60 கோடியும் இங்கு நிற்கும். மாணவரி போட மறுக்கிறார்களே டில்லி சர்க்கார் என்று இன்று கைபிசைந்து

[7-ம் பக்கம் பார்க்க]

# அரிய திட்டங்கள் இரண்டு!

உருவாகி விட்டன!

அரிய திட்டங்கள் உருவாகி விட்டன!

மகோன்னதமான திட்டங்கள்—மிக அற்புதமான திட்டங்கள்—கேட்பவர் கருத்தையெல்லாம் கவர்ந்திடத்தக்க திட்டங்கள் உருவாகி விட்டன.

இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எந்த நாட்டுக்கும் பயன்படத்தக்க திட்டங்கள், இந்தக்காலத்திற்கு மட்டுமல்ல, எந்தக் காலத்திற்கும் பயன்படத்தக்க திட்டங்கள், என்றென்றும், சிரஞ்சீவியாக இருக்கத்தக்க உயர்வும் சிறப்பும் ஒருங்கே அமைந்த திட்டங்கள் உருவாகி விட்டன!

உண்மையாகவே உருவாகி விட்டன!

மெய்யாகவே, வாய்மையாகவே, நிஜமாகவே, உருவாகி விட்டன.

உணவு, உடை, இரண்டு கவலைகளும் இனி நமக்குத் தேவையில்லை. மனதை மருட்டும் விதத்திலே வளர்ந்துள்ள இந்த இரண்டு மகத்தான பிரச்சினைகளுக்கும் மகத்தான திட்டங்கள் உருவாகி விட்டன.

இரண்டு திட்டங்கள்! அற்புதமான திட்டங்கள்!! உணவுப் பஞ்சம் தீர ஒரு திட்டம், உடைப் பஞ்சம் போக மற்றோர் திட்டம், ஆக இரண்டு திட்டங்கள்! இணையற்ற திட்டங்கள்!!

உணவுப் பொருள்களுக்காக, இனி, கோடி கோடியாக வெளிநாட்டவர்க்குப் பணத்தைக் கொட்டிக் கொடுக்கத் தேவையில்லை. உணவுப் பஞ்சத்தை ஒரு விநாடியில் ஒழித்துக் கட்டும் வழி கண்டு பிடிக்கப்பட்டு விட்டது.

ஆடை வகைகளுக்காக அந்நிய நாட்டவர்க்கு இங்கிருந்து செல்லும் பெருந்தொகை இனிச் செல்லவேண்டிய அவசியமில்லை. ஆடை நெருக்கடியைத் தீர்க்கவும் ஓர் அதி அற்புதமான திட்டம் தயாராகிவிட்டது.

திட்டங்கள் இரண்டும் சர்க்காருக்கு ஒரு காசும் 'செலவு' வைக்காதவை.

தம்பிடி செலவின்றி, இனி, சர்க்காரால், உணவு, உடை, இரண்டு பிரச்சினைகளையும் தீர்த்துவிடமுடியும். ஆம் அத்தகைய திட்டங்கள்தான் இவை!

எந்தப் பொருளாதார நிபுணரும் இந்த இரு திட்டங்களைக் கண்டால் மிரண்டு ஓடுவிடுவர்—நிச்சயம். அவர்களால் இவை போன்ற, காசுபணம் செலவில்லாத, சர்க்காருக்கும் செலவு வைக்காத, சிறந்த திட்டங்களைத் தீட்டமுடியாது! நிச்சயம் முடியாது!!

ஐக்கிய மாகாண காங்கிரஸ் தலைவர் ஒருவர் தீட்டியது, இந்த உணவுப் பஞ்சம் தீர்க்கும் திட்டம்! சர்தார் வல்லபாய் படேல் தீட்டியது உடைப் பஞ்சம் போக்கும் திட்டம்!

எங்கே அந்த திட்டங்கள் என்கிறீர்களா—இதோ!!

உணவுப் பஞ்சம் தீரவேண்டுமானால், நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் வாரத்திற்கு ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பது என்று ஆரம்பித்து விடவேண்டும். பிறகு, பஞ்சம் பறந்தோடிவிடும்.—இது, ஐ. மா. காங்கிரஸ் தலைவரின் திட்டம்.

உடைப் பஞ்சம் போக வேண்டுமானால், ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் துணியை தாங்களே நெய்து கொள்ள வேண்டும்—இது, சர்தார்ஜியின் புதிய திட்டம்.

எப்படி இந்த இரண்டு திட் டங்கள்!! அற்புதமாக இல் லையா?

"அற்புதம் தான்! ஆனால் ஒன்று: வாரத்திற்கு ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பானேன்! ஏழு நாளும் இருந்து விட்டால், பிறகு மனிதனே இருக்க மாட் டானே, உணவுப் பிரச்சினை என்ன—மனிதப் பிரச்சினையே தீர்ந்துவிடுமே!" என்றும், "உண வுப் பிரச்சினைக்காரர் சொன்ன தைப் போலவே உடைப் பிரச் சினை தீருவதற்கும், வாரத்திற் ஒரு நாள், உடை இல்லாம இருந்துவிட்டால் போகிற என்று சர்தார்ஜி சொல்லாம இருந்தாரே, அதுவே நம் நல் காலம்" என்றும் கூறுகிறீ களா!

குறும்புக்காரர்களய்யா நீங் கள்!!

எவ்வளவு கஷ்டப்பட்டு அவ கள் இருவரும் இந்த இரண் திட்டங்களைத் தயாரித்திருக் றார்கள்! கேலி செய்கிறீர்களே நீங்கள்! நியாயமா இது!

கேலியா செய்கிறீர்கள் கேலி சர்தார் படேல் ஜெயில் அமைச் சர், நினைவிருக்கட்டும்! அதிகப் கேலி பேசினீர்களோ, சிறைக் கம்பிகளை எண்ண வேண் வந்துவிடும்! திட்டத்தைக் கூ றால் கேலியா செய்வது!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

மணர்கள் பழைய ஆச்சாரத்தோடு
நடக்க ஆரம்பித்தால், மற்றக்
குலத்தவரும் அதுபோலவே நடப்
பர். அப்போது அல்லல் இராது.
பாகிஸ்தான் என்ற பேச்சு இராது.
எங்கும் சாந்திஸ்தான், ஏற்படும்,
என்று கூறினர்.

ஆச்சாரத்தை அப்பு அழுக்கின்றி
அனைவரும் கடைப்பிடித்தால், சாந்
திஸ்தான் ஏற்படும் என்று சங்க
ராச்சாரியார் கூறியது வேத
புராண இதிகாச காலத்தையோ,
அதற்குப் பிற்பட்ட ஆரிய ஆதிக்
கம் கலந்த அரசர்கள் காலத்
தையோ, மக்கள் மறந்து விட்டி
ருப்பர் என்ற எண்ணத்தினுல்
என்று எண்ணுகிறேன், ஏனெனில்
சாஸ்திரோக்தமாகச் சகலஜாதி
யாரும் வாழ்ந்த நாளிலேயும்,
தேவாசுர யுத்த முதற்கொண்டு
குருக்ஷேத்திர யுத்தம் வரையிலே
நடந்ததற்கு ஆதாரம் இருக்கிறதே
யொழியச், சங்கராச்சாரியார்
குறிப்பிடும் சாந்திஸ்தான் இருந்த
தாகத் தெரியவில்லை. பூலோகத்
திலே கடவுளே அவதாரம் எடுத்த
காலம் என்று கனபாடிகள் குறிப்
பிடும் கபட ஏடுகளின்படி பார்த்தா
லும், சாந்திஸ்தான் இல்லையே!
சீதாபஹரணமும் தீரௌபதி மான
பங்கமும், ருக்மணி கலியாணமும்,
திரிபுர தகனமும், கரதூஷண வத
மும், இலங்காதகனமும், இராம
இராவண யுத்தமும், சூரபத்மன்
சண்டையும், பரசுராமர் திக்விஜய
மும், வேறு பல புராண சம்பவங்
களும், ஆச்சாரங்கள் அப்பு அழுக்
கின்றி அனைவராலும் அனுஷ்டிக்
கப்பட்ட காலத்துக் கதைகள்
தானே! அன்று ஏற்படாத சாந்
திஸ்தான்; இன்று ஆச்சாரத்தை
அனுஷ்டித்தால் எப்படி ஏற்படும்?
சங்கராச்சாரியார், குறிப்பிடுவது
பெயரளவில், சாந்திஸ்தானே
தவிர பொருள் அளவிலே அது
ஆரியஸ்தானே யன்றி வேறு எது
வாக இருக்கமுடியும்? சாந்திஸ்
தான், என்று அவர் குறிப்பிடும்
நிலை மீண்டும் வராது என்பது
மட்டுமல்ல, சங்கரஸ்தானத்தை
வகிக்கும் நிலைமைகளுங்கூட இனி
மாறித்தீரும். ஆச்சார வேடத்தி
னல் ஆரியஸ்தான் அமைக்கப்
பட்டதை அறிந்து கொண்டனர்
மக்கள். எனவே அவர்களிடம்
மீண்டும் ஆச்சாரத்தைப் பேசிக்,
குலாச்சாரத்தைக்கூறி, ஆரியஸ்
தானங்களை அமைக்கமுடியாது.
இந்துஸ்தான், காந்திஸ்தான், சாந்
திஸ்தான், என்று பெயரளவிலே
மாறுபட்டாலும், இவைகள் யாவும்
பொருள் அளவில் ஆரியஸ்தான்,
என்பதை அறிவுள்ளோர் அறிந்து
கொண்டனர். அவர்கள் ஆச்சா
ரம் கெட்ட ஆரியனையும் ஆச்சாரத்
தோடு இருப்பவனையும், இரண்டு
வித வேடத்திலே தோன்றும் ஒரே
நடிகனுகவே கருதுவர். தொல்லை
ஒழிந்து, துயரம் நீங்கி, சுரண்டுதல்
நின்று, சுகபோகிகளின் சூத்திரக்
கயிறு அறுபட்டு, அனைவரும்
சமம், பிறப்பினுல் உயர்வு தாழ்வு
இல்லை, ஜாதி இல்லை, பேதமில்லை,
பார்ப்பனன் இல்லை, பஞ்சமன்
இல்லை, ஏய்த்துப் பிழைப்பவன்
இல்லை. ஏமாளி இல்லை, தரும
வான் இல்லை, தரித்திரன் இல்லை,
தரகன் இல்லை, பொருளை இழப்ப
வன் இல்லை, என்ற நிலை ஏற்பட்டு,
யாவருக்கும் வாழ உரிமை உண்டு.
ஒருவரை ஒருவர் அடிமை கொள்
ளவோ அடிமைப் படவோ அவசி
யம் இல்லை, சக்திக்கேற்ற அளவு
சகலரும் உழைப்பர், தேவைக்
கேற்ற அளவு பெறுவர், என்ற
அமைப்பு ஏற்பட்டால், அன்று,
அங்கே, நிச்சயமாகச் சச்சரவு
இல்லை, சஞ்சலம் இல்லை, சமர்
இல்லை! சாந்திஸ்தான் அதுதான்!
பல்லக்கிலே பவனி! பாதகாணிக்
கைக்குப் பக்த கோஷ்டிகள்! பட்
டுப் பீதாம்பர மெத்தைகள்! பாதக்
குறடு தங்கத்தில்! பாலும் பழமும்
வேளா வேளைக்கு! விசிறிட ஆள்!
கால்கை பிடிக்கச் சீடர்கள்! கட்டி
யம் கூறப்புலவர்கள்! தங்க மடம்!
எங்கும் ஆதிக்கம் செலுத்த ஏற்ற
இடம்! என்ற நிலைமையிலே உள்ள
எத்தர்கள், நிம்மதியாக உண்டு,
நித்திரை நேரத்தில் கண்ணை மூடிக்
கொண்டு, ஓம்! சாந்தி, சாந்தி,
சாந்தி, என்று கூவினுல், அங்கே
சாந்திஸ்தானம் தோன்றிவிட்டது,
என்று விஷய மூணர்ந்தோர்
கருதார்.!

பாரதியாரின் "குயில்" கூவுகிற
படி ஆரியத்தின், மேன்மையை,
ஆச்சாரத்தின் மகிமையைச், சங்க
ராச்சாரியார் ஆயிரம் முறை உச்
சாடனம் செய்தாலும், அவர்
கூறும் சாந்திஸ்தான், சொப்ப
னஸ்தானுகத்தான் முடியும்! வசிஷ்
டரும் வியாசரும் வியாகர்ணரும்
பதஞ்சலியும், தேவரும் மூவரும்,
சாணக்கியரும் பிறருமாக, ஆரி
யத்தலைவர்கள் இன்றையச் சங்க
ராச்சாரியார் போல் எத்தனையோ
ஆயிரம் மடங்கு அறிவாற்றல்
பெற்றவர்கள், இந்தச் சங்க
ராச்சாரியார், எந்தவேத உப
நிஷத்துகளிலே வல்லவரென்று
புகழப்படுகிருரோ அவைகளுக்கு
மூலத்தை மொழிந்தவர்கள். "இந்த
லோகத்துக்கும் அந்தலோகத்துக்
கும்" இடையே போய்வந்து
கொண்டிருந்தவர்கள், இந்திரனை
யும் சந்திரனையும் சொந்தங்கொண்
டாடினவர்கள், நீரின் மேல் நின்ற
வர்கள், நெருப்பிலே புரண்டவர்
கள், நிர்மலனைக் கண்டவர்கள்,
ஆகியவர்கள் அமைத்த "ஸ்தான்"
இன்று உருக்குலைந்து இருப்பது
போலத் தெரிகிறதே தவிர உள்ளுக்
குள் புரையோடிப்புழுத்துக் கிடக்
கிறது. அந்த ஸ்தானின் மரணப்
படுக்கையருகேயாரடித்தழும்கடை
சிக் கும்பல், இப்போதுள்ள, ஆரி
யக்கூட்டம்! உபதேச ஊசி குத்து
முறையினுல், அதனை உயிர்ப்பிக்க
முடியாது! இதனைத் தெரிந்து
கொள்ளாமல் சங்கராச்சாரியார்
குரங்கைப் புகழ்ந்த குயில்போல
"அந்த ஆச்சாரம், குலதர்மம், சனு
தனம்" என்று புகழ்கிருர் அந்தக்
குயில் மொழி கேட்டகுரங்கு,

"மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறி
கொண்டாங்கனே, தாவிக்
குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்
ஆவியுருகுதடீ: ஆஹா ஹா!
என்பதுவும்
கண்ணைச் சிமிட்டுவதும்,
காலாலும் கையாலும்
மண்ணைப் பிராண்டி பெருங்கும்
வாரியிறைப்பதுவும்

ஆக இருந்ததாம். அதுபோலச்
சங்கராச்சாரியாரின் இந்தச் சத்
தற்ற பேச்சைக் கேட்டுச் சனு
தனங்கள், சந்தோஷ முற்றுச்
சளசளவென்று சப்தத்தைக்கிளப்
புகின்றன. இந்தச் சந்தடியில்
தான், நம்மவர்களிலே சிலர் சந்தே
கஸ்தானிலே வசிக்கும்வரை இருக்
கும்! பிறகோ! அவ்வளவே
யொழிய, சாந்திஸ்தான் என்று
உபதேசம் செய்வதன் மூலம், சனு
தனஸ்தானை மீண்டும் ஸ்தாபித்து
விடலாம் என்று கருதவேண்டாம்.
நடவாது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

கமண்டலதாரிகளாக அவர்கள் காட்டுக்கும் நாட்டுக்கு மிடையே உலவியகாலத்திலேசெய்துவந்தது. அவர்கள் காடுகளிலே வசிப்பர், ஆனால் அக்காடுகளிலே துஷ்ட மிருகங்கள் வராதபடி பாதுகாத்துக்கொள்ள, ஒரு முயற்சியும் அவர்களுக்குக் கிடையாது. காத தூரத்திலே கர்ஜனை கேட்டால் போதும், ஆரியன் அரண்மனை சென்று, "ஏ! ராஜனே!" என்று ஒரு அதிகாரத்தொனி கிளப்பினால் போதும், நால்வகைச்சேனையுடன் நமது ராஜாதிராஜன் கிளம்பி விடுவான். வேட்டையாடுவான்! துஷ்ட மிருக பயமின்றி ஆரியர் வாழ்வர், ஒருதுளியும் பாடுபடாமல்! ஆரியர் யாகம் செய்வர், அதன்செலவுக்கு நமது ராஜமார்த்தாண்டர்கள் பய பக்தியுடன் பொருள் தருவர், இராஜ்யத்தை இழந்தேனும், பெண்டு பிள்ளைகளை விற்றேனும் சுடலைகாத்தேனும்! ஆரியன்வேதம் ஓதுவான்! ஆனால் அதற்கான "ஆலயங்கள்" அமைக்க அவனுக்கு அரைக்காசும் செலவு கிடையாது. எல்லாம் அரசாங்கப்பணம்! அன்றும் சரி, இன்றும் சரி, ஆச்சாரத்தோடு வாழ்ந்தாலும் சரி, ஆச்சாரம் இழந்தாலும் சரி, ஆரியவாழ்வு, மற்றவரின் உழைப்பை உறுஞ்சும் தந்திரமான வாழ்க்கைத் திட்டமேயொழிய வேறில்லை. இதனை அறியாது நம்மவரிலே சிலர், ஆரியர் ஆச்சாரத்தை இழந்துவிட்டனர் கெட்டுவிட்டனர், ஆகவே தான் அவர்களுக்கு எதிர்ப்பு. அவர்கள் பழைய காலத்தின் முறைப்படி இருந்தால் பாதகம் இல்லை என்று பேசுகிறார்கள். அந்த பழையகால ஆரியம் பசுத்தோல் போர்த்த புலி, தற்காலத்திலே, நாகரிகஉடையிலே உலவுகிறது அதே நாசகாரியம் செய்யும் நோக்குடன். உடை மாறி என்ன, உறைவிடம் மாறி என்ன, உள்ளம் மனப்பாங்கு பர்ணசாலைக்காலத்திலே இருந்ததுவேதான் "பங்களா" புகுந்தபோதும் இருக்கிறது. அப்படித்தானே இருக்கமுடியும்! இயல்பு இலேசானதா? மாறிவிடுமா?

சின்னாட்களுக்குமுன்பு சங்கராச்சாரியார், "பிராமணர்களைத்தான் நான் குறை கூறுவேன். அவர்கள் ஆச்சார விதிகளை மறந்தார்கள், எனவேதான் இவ்வளவு இடையூறுகள் வந்து விட்டன, பிராமணர்கள், ஆச்சாரத்தில், அவர்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள விதிப்படி நடப்பார்களானால், மற்றக் குலத்தாரும் தத்தம், ஆச்சாரப்படி நடப்பர். ஜெகத்திலே க்ஷேமம் நிலவும்" என்று கூறினாராம். கூர்ந்து கவனிப்பவருக்கு இப்பேச்சிலேபுதைந்துள்ள கருத்துவிளங்கும். பிராமணர்கள் பழைய ஆச்சாரப்படி மீண்டும் நடக்க வேண்டும் என்கிறார் சங்கராச்சாரியார். சரி! எதற்காக? அப்படி அவர்கள் நடந்தால் மற்றகுலத்தவரும் தத்தம் ஆச்சாரப்படி நடப்பர், என்கிறார் அவர். ஆகவே, மற்ற குலத்தவர், அந்த நாள்போல, ஏன் என்று கேளாமல், எதிர்த்துப் பேசாமல், பிராமணனுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே, சங்கராச்சாரியார் இதனைக் கூறுகிறாரே தவிர, வேறில்லை. பழைய ஆச்சாரப்படி, பிராமணராகட்டும் மற்றக் குலத்தவராகட்டும் நடந்தபோது இன்றுள்ள கேடுகளிலே எது இல்லாதிருந்தது?

'போர் நடக்கிறது இப்போது. கோடிக்கணக்கிலே பொருள் நஷ்டம். இலட்சக் கணக்கிலே மக்கள் இறந்தனர். நிரபராதிகள் மாள்கின்றனர். குழந்தை குட்டிகள் பெண்கள், பாலர், கிழவர், இறக்கின்றனர். கொடிய யுத்தம். இது காலக்கேடு." என்பர், சங்கராச்சாரியார். அவர் வழிப்படி பேசும் சிலர், இப்படிப்பட்ட கோர யுத்தங்கள், மக்களின் மனம் மாசடைந்து பழையகாலப் பண்புகள் கெட்டுவிட்டதால், நேரிட்டன, என்று பேசுவர். போர், கொடுமை! ஆம்! யாரும் இல்லை என்று கூறவில்லை. ஆனால் வேதியர் வேதமோதி, க்ஷத்திரியன் நாடாண்டு, வைசியன் பொருள் ஈட்டிக் கொண்டு, சூத்திரன் சேவை செய்து கொண்டிருந்தகாலம் இருக்கிறதே சங்கராச்சாரிகள் சதாகாலமும் மீண்டும் வரவேண்டும் வரவேண்டும் என்று வேண்டித்துதிக்கும் அந்தக்காலத்திலே, ஆச்சாரம் கெடாத காலத்திலே, ஆரியம் அணுவும் பிசகின்றி இருந்தகாலம், குலாச்சாரத்தைக் குறை கூறாதகாலம், அந்தக்காலத்திலே இல்லையா, இந்தக் கொடுமை? இராமாயணமும், பாரதமும், போரின்போது ஒரு கட்சியார்மீது மற்றோர் கட்சியார் புஷ்பமாரி பொழிந்தனர் என்று கூறுகின்றன பயங்கரமான சண்டைகள், தேவர்கள்தந்த ஆயுதங்கள், ஆளைத்தேடிக் கொல்லும் ஆயுதங்கள், இவைகள் ஆச்சாரம் மிகுந்திருந்த நாளிலே! அந்தக்கவிகளைப் படித்தால் அறியலாம், இரத்தம் வெள்ளம்போல் ஓட, அதிலே பிணங்கள் மிதக்க, காளியும், கூளியும் கூத்தாட, நரியும், நாயும், நாவை நீட்டிக் கொண்டு ஓட, கழுகு வட்டமிட, நடந்த கடும்போர்களைப்பற்றிய கதைகளை! இந்தப் படுகொலைகள், பர்ணசாலைகளிலே, ஆரியர், ஆச்சாரத்தை கைநழுவவிடாது இருந்த நாட்களிலே நடந்தனவேயன்றி, இன்று மட்டுமல்ல! இன்று இலட்சக்கணக்கிலே மக்கள் மாள்கின்றனர், அன்று அஃரோணிக்கணக்கு! இன்று "கடவுள்" களத்திலே புகுவதில்லை. தமது துஷ்டப் பிள்ளைகளின் தீயாட்டத்தைக் காண மறுக்கிறார். அன்று "கடவுள்" கதை எடுத்தார், வில்லெடுத்தார், சக்கரம் விட்டார், சூலம் ஏந்தினார், வாள் எடுத்தார், தேர் ஓட்டினார், தூது சென்றார், முக்கியமான போர்க்காரியங்களைச் செய்திருக்கிறார், ஆகவே, ஆச்சார அனுஷ்டானத்தோடு இருந்த காலம், அந்த நாளிலே என்று ஏங்கிப் பெருமூச்சுவிடும் தோழர்களைக் கேட்கிறேன், இன்றுள்ளபோர், அன்று இல்லையா? நமது கடவுள்களுக்குள்ள "கௌரவமே" போர்களிலே அவர்கள் காட்டிய திறமையைக் கொண்டுதானே கட்டப்பட்டிருக்கிறது. சந்தேகமிருப்பின் ஒரு புராணப் பிரசங்கத்தைக் கேட்டுப் பாருங்கள். இதோ பேசுகிறார் ஒரு சைவர்.

"என்னப்பன், உமையொரு பாகன், தேர்தனில் ஏறினார், போருக்குக் கிளம்பினார், அவருடைய கோபாவேசத்தைக் கண்டு முப்பத்து முக்கோடி தேவரும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் நடுநடுங்கிப்போயினர். மகாவிஷ்ணு பயந்து பாற்கடலிலேபோய் ஆதிசேஷன்மீது படுத்தார். பயத்தால் கண்களைமூடினார், திறக்கவே இல்லை, பிரமனோ சிருஷ்டியையும் மறந்து கிடந்தார். என்னாகுமோ, ஈசனின் கோபத்தால் என்னென்ன நேரிடுமோ என்று தேவர்கள் அஞ்சினர். அந்த நேரத்தில், தேரின் அச்சு முறிந்தது, ஐயன், சிரித்தார், ஒரே ஒரு சிரிப்பு, என்ன நடந்தது, சிரிக்கும்போது அவருடைய நெற்றிக்கண் திறந்தது, திறந்ததுதான்

நாமதம், திரிபுரமும் தீக்கிரையாயிற்று. முப்புரமும் எரிந்தது, எப்புரமும்எரித்தது அந்தத்தீ. ஒருசிரிப்பினால், மூன்று புரங்களை எரித்த முழுமுதற்கடவுள், மழு மான் ஏந்தினமகேசன்,மாதொருபாகத்தான் நால்மருகனும் முருகனின் தந்தையின் மாவீரம், எவருக்கே உண்டு,

அரகரமமப்பார்வதி பதயே நமஃ!—என்று முடியும் சைவர் தமது கடவுளின் வீரத்தைக்கூறும் கதாப்பிரசங்கம். இது போர் அல்லவா? இந்தப்போரிலே நடந்தது நாசமல்லவா?

வைணவ பூஷணத்தின் வாயுரை இதற்கு மட்டமாக இருக்குமென்று எண்ணாதீர். அவர் அரிபரந்தாமனின் ஆற்றலை உரைப்பதைக் கேண்மின்.

"ஐயன், கோதண்டத்தைக் கையிலெடுத்து, நாண் ஏற்றினான்! உடனே வான வீதியிலே தேவர்கள்கூடிவிட்டனர். வந்தது விபத்து என்றனர். நாணைத்தட்டினார்; எதிரியின் படை பஸ்மீகரம் ஆயிற்று. ஐயன் ஆணையைப் பெற்ற அம்பு, எதிரியைக் கொன்று, ஏரேழு கடலிலும் மூழ்கிப், பிறகு அம்பறாத்தூணியிலே வந்து சேர்ந்தது" என்பார் அவர். கடவுளரின் பிரதாபமே கடும்போரிலே அவர்கள் காட்டிய வீரத்தைப் பொறுத்திருப்பதாகக்கதை இருக்கும்போது, போர் பொல்லாததானது என்று பேசுவதும், அந்தப் பொல்லாங்கான போரும் இக்காலத்திலே, ஆச்சாரம் கெட்டதனால்; குலதர்மம் அழிந்ததால் ஏற்பட்ட வினை' என்று கூறுவதும் பொருந்துமா?

"இதிலே ஒரு விசேஷமல்லவா? அந்தக்காலத்திலேயும் போர் உண்டு, ஆனால் அவைகள் தர்மயுத்தங்கள்! துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனார்த்தம்!" என்று கருதினர், அவர்களை அழிக்கப் போரிட்டனர்."

"இந்தக்காலத்திலே, அதுபோலவே, சிலருக்கு வேறுசிலர் துஷ்டர்களாகத் தோன்றவே, அந்தத்துஷ்டர்களை அழிக்கப் போர், மூள்கிறது. இன்று நடக்கும் போர், தர்மயுத்தம் அல்லவென்று கூற முடியாது."

இது மார்க்கட் பிடிக்கும் சண்டையாமே!

"இருக்கலாம்! விராட பர்வத்திலே, மார்க்கட்கூட அல்ல, மாடு பிடிக்கும் சண்டை நடந்திருக்கிறதே"

"அந்தக்காலத்திலே அரக்கர்களை அழிக்கச்சண்டை நடந்தது. இப்போது மனிதர்களுக்குள்ளாகவே சண்டை பாருங்கோ, ஜெர்மனியாளும் கிருஸ்தவா, வெள்ளைக்காரனும் கிருஸ்தவன். இருந்தாலும், சண்டை இது அக்ரமில்லையோ!"

"இது இப்போதுமட்டுந்தானா? கௌரவர் யார், பாண்டவர் யார்? ஒரே குடும்பமாயிற்றே! ஜெர்மனியாளும் வெள்ளைக்காராளுமாவது வேறு வேறு தேசம், இடையே சமுத்திரம். கௌரவாளும் பாண்டவாளும் ஒரே குடும்பமாயிற்றே. அவர்களுக்குள்ளே ஏன் அவ்வளவு பிரமாதமான போர் மூண்டுவிட்டது"

"ஆமா, அந்தக்காலத்திலே நிரபராதிகளைக் கொல்றதில்லை. இந்த காலத்திலே பாருங்கோ, குண்டு வீசினா, ஊரே அழிஞ்சுன்னா போறது!"

"ஆமாம்! ஆமா, அந்தக்காலத்திலேயும் இந்த அக்ரமம் உண்டு. ஒரு உதாரணம் கேளுங்கோ இராமாயணத்திலே இருப்பது இராவணன், சீதையைத் தூக்கிண்டு போனான்!"

ஆமாம்! மகாபாவி, ஜானகியைச் சிறை எடுத்தான்"

"அது சரி! அவன் அழிஞ்சது இருக்கட்டும். அந்தக்காலத்திலே அனுமார் இலங்கைப் பட்டணத்தையே கொளுத்தினாரே, அது இந்தக் காலத்திலே எதிரியின் பட்டணங்களின்மீது நடத்தும் குண்டு வீச்சுக்கு எந்த விதத்திலே குறைந்தது? கூறும் கேட்போம்! இப்ப நடக்கிற குண்டு வீச்சு, ஊர் அழிவது, பெரியபாபம் காலக்கொடுமை என்கிறீர். காலம் வேதிய குலத்தின் பெருமை விளங்கியகாலமாக இருந்தபோது, இராவணன் செய்த குற்றத்திற்காக, அவன் ராஜ்யமே அழிக்கப்பட்டதே, அதுவும் சண்டைக்கு முன்னாலேயே, இதுமட்டும் நியாயமோ?"

"போமய்யா! நீர் இந்தச் சுயமரியாதைக்காராள்மாதிரி பேசுகிறீர்,'

இதுபோலத்தான் முடியும், அவர்களின்பாஷைப்படியே, நாம், அந்தக்காலத்துப்பெருமையை பேசுபவரிடம் வாதிட்டால்.

போர்மட்டுமல்ல், பஞ்சம், பிணி, வேலையில்லாக்கொடுமை, தீ, வெள்ளம் முதலிய இயற்கையின் கொடுமைகளும், செயற்கைத் தொல்லைகளும், அந்தக்காலத்திலே இருந்தன என்றுதான், அவர்கள் குறிப்பிடும் எந்த ஏட்டிலிருந்தும் ஆதாரம் காட்டமுடியுமே தவிர, ஆச்சாரத்தோடு மக்கள் வாழ்ந்தனர். ஆகவே, போர் இல்லை, பஞ்சம் இல்லை, பிணி இல்லை, வெள்ளம் இல்லை, என்று கூறிவிடமுடியாது. அதுபோலவே, "பாபம்" செய்பவர் இல்லை என்றும் கூறிவிட முடியாது. பத்து அவதாரங்கள் எடுத்திருக்கிறார், "பாபி"களைத் தொலைக்க. எனவே இன்றுள்ள எல்லாத் தொல்லைகளும் அன்றும் இருந்தன, என்று ஏற்படுகிறது. இந்நிலையிலே அந்நாள் போலில்லையே, என்று ஏங்குவதன் அர்த்தம்என்ன? அந்நாள் ஆச்சாரத்தில், சமூகம் அடைந்தநன்மை ஏதுமில்லை, என்பதை அறிந்தும், அந்த ஆச்சாரத்தை நாம் இழந்த இன்பம் என்று கருதி அதை மீண்டும் பெறவேண்டும் என்று பேசுவதின் நோக்கம் என்ன? ஆச்சாரங்களிலே, மக்களுக்கு நம்பிக்கை பலமானால், ஆரியரின்பிடி, தளராது என்பதன்றி வேறில்லை. நான் கூறுவது தவறு என்றால், ஆச்சாரத்துக்காகப் பரிந்து பேசுபவர்கள், அந்த ஆச்சாரங்கள் அரசு செலுத்தியபோது நாம் இன்று அடைந்திருக்கும் நன்மைகளிலே பதினாயிரத்திலே ஒரு பகுதியாவது பெற்றிருந்ததாகவோ, இந்நாட்களிலே நமக்குள்ள இடர்களிலேசிலவேனும் அந்த நாட்களிலே கிடையாதுஎன்றோ, கூறி மெய்ப்பிக்கட்டும்பார்ப்போம். அது அறிவு, ஆண்மை! வீணாக, ஆச்சாரம் என்று கூவிப்பயன் என்ன?

பார்ப்பனர், ஆச்சாரத்தைக் குறைத்துக் கொள்ளாமல் இருந்த அந்நாட்களிலே, அவர்களுடைய ஒழுக்கம், எவ்வண்ணம் இருந்தது? இப்போதுதான், பார்ப்பனர் கெட்டு விட்டனர் என்று பரிதாபப்படுகிறார், சங்கராச்சாரியார். பழையபடி பார்ப்பனர் ஆச்சார அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று உபதேசிக்கிறார். அவர் எந்தக் காலத்தை மனதிலே வைத்துக்கொண்டு, இதைக் கூறினாரோ, அந்த ஆச்சார காலத்திலே ஆரியரின் இலட்சணம், வாழ்க்கை முறை, ஒழுக்கம் எப்படி இருந்தது?

"எந்த ஜாதியானோ, எவனோ, தங்கள் மனைவியை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டால், அவள் பிறகு விரும்பத் தக்கவளல்லவென்றோ, கெட்டுவிட்டவளென்றோ, பிராமணக்கணவர்கள்

கருதுவதில்லை, எவன் இழுத்துக் கொண்டு போய், எவ்வளவு காலத்திற்கு வைத்துக் கொண்டிருந்தாலும், அதுபற்றிக் கவலைப்படாமல், அவள் மறுபடி தன்னிடம் தரப்பட்டு விட்டால் போதுமென்று, கெஞ்சுவர். ஒழுக்கக் குறைவு மிகுந்திருந்த காலமாதலால், பஞ்சைப் பார்ப்பனரின் மனைவிமார், அரச குடும்பத்தினரோ, பணம் படைத்த வைசியரோ, தாசனாக இருந்து வந்த சூத்திரனோ கூட, ஆசை காட்டினால் மயங்கி இணங்கினர். எனவே, பிராமணக் கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களை, சர்வஜாக்ரதையாகப் பாதுகாக்க வேண்டி இருந்தது. புராணங்களிலே, ரிஷிபத்னிகளெல்லாங்கூட, வியபிசாரம் புரிந்ததாக, அமோகமான சம்பவங்கள் காணக் கிடக்கின்றன. அதிலும், யாரிடம் கூடுகிறோம் என்ற "விவஸ்தை" (பாகுபாடு) கூட அற்றுக், கண்டவனிடம் கூடினதாகத் தெரிகிறது. உதாரணமாக, வேதன் என்ற குரு வெளியே சென்றிருந்த சமயத்தில், குருபத்தினி, சீடனாகிய உதங்கனிடம் காமச் சேட்டையாடினாள். அது தெரிந்ததால், குரு, தன் பத்னியிடம் கொண்ட அன்பையோ, மதிப்பையோ ஒன்றும் குறைத்துக் கொள்ளவுமில்லை" மேலே பொறித்திருப்பவை, பொறுப்பற்ற வாசகங்களுமல்ல, துவேஷமொழியுமல்ல, வேதாசாரம்! ஆராய்ச்சியாளரின் பேச்சு! சு. ம. வின் சுடுசொல் அல்ல! சரித, இலக்கிய ஆராய்ச்சிக்காரரின் தீர்ப்பு.

வங்காளத்திலுள்ள ஹூக்ளி, பல்கலைக் கழகச் சரிதப் பேராசிரியர், தோழர் நிருபேந்திர குமாரதத் என்பார், இந்தியாவில் ஜாதி தோன்றி, வளர்ந்த வரலாறு, என்ற தலைப்புடன் தீட்டியுள்ள புத்தகத்திலே காணப்படும், மணிமொழிகள். பூதேவர்களின் இலட்சணம், இதன் மூலம் விளங்கும் என்று நம்புகிறேன். ஆச்சார காலத்து அலங்கார நிலைமை இது! ஆகவே ஆச்சாரத்தினால் என்னதான் பயன்? மற்றக்குலம், அடங்கி ஒடுங்கி நடக்கும்; ஆரியர் பாடுபடாமல் வாழலாம், பிறர் உழைப்பினால் வளரலாம் என்பதன்றிச் சங்கராச்சாரியார் எடுத்துக்கூற, வேறென்ன இருக்கிறது?

இந்தச் சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாத சிலர், சங்கராச்சாரியார் சனாதன சேவைக்காகப் பார்ப்பனரையும் கண்டித்தார் என்று திருப்தியும் அடைகின்றனர். அவருக்கும் தெரியும், அவருரையைக் கேட்டுக்கொண்டிருந்த ஆரியரும் அறிவர், பிராமணர்களுக்குக் குலாச்சார போதனை செய்தால், அதைக் கேட்டுக்கொண்டிருக்கும், பிராமணர், பழையபடி ஆச்சாரத்திலே ஈடுபட்டால் இலாபமும், இன்றுள்ளது போன்ற ஆதிக்கமும் உண்டு என்பதும் பிராமணர்கள் குலாச்சாரத்தை மேற்கொண்டதனால், நாமும் நமது குலாச்சாரத்தைச் சரிவர கடைப்பிடிக்க வேண்டுமென்று, மற்றக் குலத்தவரும் தீர்மானிப்பர், அந்தத் தீர்மானத்தின்படி சமூகம் நடக்கத் தொடங்கினால், "நீ என்ன உயர்வு? நான் என்ன மட்டம்? நீ ஏன் பாடுபடாமல் வாழ்கிறாய்? நான் மட்டும் ஏன் ஒருவேளைச் சோற்றுக்காக ஒரு நாள் முழுதும் உழைக்க வேண்டும்" என்று கேட்கும் புரட்சி அடங்கி விடும், என்ற எண்ணத்தைத்தான், சங்கராச்சாரியார் மனதிலே கொண்டுள்ளார். ஆகவேதான், அவர் வேறோரிடத்திலே பேசியபோது, பிரா

(13-ம் பக்கம் பார்க்க)


## புதிய புத்தகங்கள்! விற்பனைக்குத் தயார்!!

### அறிஞர் அண்ணாதுரை

| | ரூ. | அ. |
|---|---|---|
| அறநிலையங்கள் | 0 | 6 |
| சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் | 0 | 4 |
| தேவலீலைகள் | 0 | 8 |
| மூலபலம் முறிகிறது | 0 | 8 |
| வாழ்க்கைப் புயல் | 0 | 12 |
| இராம இராச்சியம் | 0 | 10 |
| அண்ணா பொன்மொழிகள் | 0 | 8 |
| (வியாபாரிகட்கு 20% கழிவு) | | |
| அண்ணாவின் உவமைகள் | 0 | 8 |
| 1858—1948 | 1 | 0 |
| மகாகவி பாரதியார் | 0 | 6 |
| பொருள் | 0 | 4 |
| மறுமலர்ச்சி | 0 | 4 |
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் | 0 | 2 |
| People's Poet | 0 | 2 |
| அறிஞர் அண்ணாதுரை (மலிவு) | 1 | 4 |
| ,, பரிசுப்பதிப்பு | 2 | 0 |
| கடவுள்கள் | 0 | 3 |
| கழுதை ஊர்வலம் | 0 | 8 |
| கள்ளக்கோழி | 0 | 8 |
| ஒய்யாரி | 0 | 8 |

### மு. கருணாநிதி

| | ரூ. | அ. |
|---|---|---|
| சங்கிலிச்சாமி | 0 | 8 |
| பலிபீடம் நோக்கி | 0 | 6 |
| அறப்போர் | 0 | 3 |
| கயிற்றில் தொங்கிய கணபதி | 0 | 3 |
| பரமசிவனுக்கு பகிரங்க கடிதம் | 0 | 3 |
| புரோகிதன் முளைத்தான் | | 3 |
| திராவிடத் தோழர்களே மறந்துவிடாதீர்கள்! | 0 | 6 |
| திருப்பதி மொட்டை | 0 | 6 |
| இந்தி மறுப்பு பாடல் | 0 | 2 |
| கோகிலராணி | 1 | 0 |
| புதிய பாதை | 0 | 8 |
| விழாவும் நாமும் | 0 | 6 |
| முதலாளி ஒழிக | 0 | 6 |
| யார் நாஸ்திகர் | 0 | 12 |
| அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி | 0 | 8 |
| கம்பரும் வம்பரும் | 0 | 4 |
| முல்லைக்காடு | 0 | 8 |
| மனோரஞ்சிதம் | 0 | 12 |
| தாசி (சிரஞ்சீவி) | 1 | 0 |
| ஓடிப்போனவள் கதை | 0 | 4 |

வியாபாரிகட்கு 25% கழிவு. செலவு இனாம். தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்குத் தபால் தலைகள் அல்லது முன் பணம் அனுப்புக.

**அறிவுப் பண்ணை,** 6, நங்கர்மான் தெரு, ஏழுகிணறு, சென்னை 1.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons